திராவிடநாடு

6—12—59 | வார வெளியீடு | விலை 16 காசு

ஆர்த்தெழு தோழா!

—[முத்துதாசன்]—

ஆர்த்தெழு தோழா! ஆர்த்தெழு தோழா!
அடிமையின் விலங்கை ஒடித்திடுவோம்!
சீர்பல பெற்ற திருவிடத்தின் வாழ்வை
சிதைத்திடும் கொடுமை அழித்திடுவோம்!
பார்புகழ் கொண்ட பைந்தமி(ழ்) எங்கும்
பரவிடத் தொண்டும் புரிந்திடுவோம்!
போர்முறை தெரியாப் பகைவரை வீழ்த்த
புறப்படு தோழா! ஒழித்திடுவோம்!

தென்னவ நாடு, முன்னவன் வீடு
தேய்ந்தது; புகழும் ஓய்ந்ததடா!
இன்னலில் தென்னவர் வீழ்ந்தத னாலே
இழிவுற வாழ்வும் சூழ்ந்ததடா!
பொன்னிகர் கரத்தில் விலங்கினைப் பூட்ட,
அருந்திரு நாடும் வீழ்ந்ததடா!
என்ன இக் கொடுமை? எத்தனை கோரம்?
இதன்செயல் மாய்க்க ஆர்த்தெழடா!

கலையினில் பண்பில் கட்டிடும் உடையில்
கருத்தினில் வடவன் வேறவன்தான்!
நிலையிலா அவனும் நம்மவரை வீழ்த்தி
நின்றர சாள்வதும் கேவலந்தான்!
விலைமக(ள்) இந்தி தமிழகச் சந்தில்
விரைந்து நுழைவது பெருங்கொடுமை!
அலைகடல் போல அனைவரும் நின்று
அவள்செய லொழிப்பது நம்கடமை!

நம்மொழி காக்க, நம்மிட மாக்க
நாற்றிசை முரசு முழக்கிடடா!
எம்வழி ஒன்று எம்மின மொன்று
என்றசொல் குரலை எழுப்பிடடா!
நம்வழி குறுக்கே நடந்திடும் புல்லர்
நடுங்கிட வாளைச் சுழற்றிடடா!
நம்திரு நாட்டின் அடிமையை நீக்க
நற்றமிழ்த் தோழா! விழித்தெழடா!

எள்ளி நகையாடப்பட்ட இளைஞன்!

வாளொடு வாள் கலகலவெனப் பேச, தேர்கள் கடகடவென உருள, கரிகள் கதற, பரிகள் பதற, குவலயம் செங்குருதி மயமாகக் கோரமான போர் நடக்கிறது. வேழங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டு மடமடவென வீழ்கின்றன. குடலறுபட்ட குதிரைகள் குருதி கொட்டிக்கிடக்கின்றன. வேலுக்கும் வாளுக்கும் இரையாகிய வீரர்களின் பிணங்கள் குன்றெனக் குவிகின்றன. சீறிப்பாயும் காட்டாறெனச் செங்குருதி ஓடுகிறது; எங்கணும் செந்தூள் பறக்கிறது. பயங்கரமான போர்! பக்கத்தில் நெருங்கிப் பார்த்திட முடியாத அளவுக்குப் பயங்கரமான போர் நடக்கிறது.

இரதங்கள் தூளாகின்றன! யானைகள் பிணமாகின்றன! குதிரைகள் புரண்டு வீழ்கின்றன! வேலேந்திய கரங்கள் குறைகின்றன! வேதனைக்குரல் அதிகரிக்கிறது! வெற்றி முழக்கமும் வாழ்த்தொலியும் விண்ணைப் பிளக்கின்றன!

நெஞ்சில் கனல் தெறிக்கும்போர் முழக்கம் ஓய்கிறது. நெருங்கிப் பார்த்தால் காண்பதற்கு எளிமையாகவும் இளமையாகவும் காட்சியளிக்கும் கட்டிளங்காளை ஒருவன் வெற்றிக்களிப்போடு வீறுடன் நிற்கிறான். அவன் எதிரில் ஏழு மன்னர்கள் விலங்கிடப்பட்டு நிலம் நோக்கி நிற்கின்றனர். அவனது காலடியில் அவ்வேழு மன்னர்களின் முடிகளும் போர் முரசங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. வெற்றி வீரர்கள், 'வெற்றி வேந்தன் வாழ்க!' 'வீரக்கோமகன் வாழ்க!' 'மன்னர் மன்னவன் வாழ்க!' என்ற வையகமும் வானகமும் அதிரும் வாழ்த்தொலியை எழுப்புகின்றனர்.

களம் பல கண்ட வீரர்களும் வெற்றி விருதுகள் பல பெற்ற தீரர்களும் கண்டு மருளுமளவுக்கு, வெகு கடுமையாக நடந்த போரில் வெற்றிமாலை சூடியுள்ள அந்த வீர இளைஞனையும், எதிர்த்து நின்ற ஏழு மன்னர்களையும் அடிமைப்படுத்தி, அவர்களின் முடிகளையும் முரசங்களையும் கைப்பற்றியுள்ள அவ்வெற்றி வேந்தனின் வரலாற்றையும்பற்றி எவர்தான் அறிய விரும்பார்! இதுவரை போர்க்களக் காட்சி கண்ட நாம், இனிப்போரிட்டுக்கொண்ட அரசர்களின் வரலாற்றினை அறிய இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய பாண்டிய நாட்டிற்குப் போவோம். பைந்தமிழ் இலக்கியச் சோலைக்குள் புகுவோம்.

உலகுக்கெல்லாம் மணம் தரும் முல்லைக்காடாம் தமிழகத்தின் ஒரு பகுதி, மதுரையைத் தலைநகராகக் கொண்ட பாண்டிய நாடு. பொதிய மலையின் பல்வளமும் பொங்குகடல் முத்தும் கொண்ட அப்பாண்டிய நாட்டை ஆண்ட அரசர்கள் நீதி தவறா நெறிமுறையாளர்கள். குடிமக்கள் நலங்கருதிக் கோலோச்சியவர்கள். முதல், இடை, கடையென மூன்று சங்கங்கள் வைத்து மொழி வளர்த்தவர்கள். இப்படிப்பட்ட பாண்டியன் பரம்பரையிலே ஒருவன், சிறுவனாயிருக்கும் போதே

இரா. செல்வன்

அரியணை ஏறினான். இளைஞனாகத்தான் அவன் இருந்தான். என்றாலும் ஈடில்லா அறிவும் ஆற்றலுமுள்ளவன்; திறமையும் தேர்ச்சியுமுடையவன்; படைக்கலப் பயிற்சி பெற்றவன்; பைந்தமிழ்ப் பாக்களியற்றும் நாவன்மை மிக்கவன்.

தமிழ்ப்புலவர்களிடத்து நீங்காப் பற்றுக்கொண்ட அவனைப் புடைசூழ்ந்து எப்போதும் புலவர்கள் பலர் இருந்துகொண்டே இருந்தனர். மாங்குடி மருதனார் என்ற புலவர் பெருந்தகையாரைத் தலைவராகக்கொண்ட ஒரு புலவர் குழுவினை அவன் தன் அவையில் வைத்து ஆதரித்துவந்தான். அவனை நாடி வந்த ஏனைய பல புலவர்களுக்கும் பாணர்களுக்கும் கூத்தர்களுக்கும் வேண்டும் பரிசில்களை விரும்பிக் கொடுத்துக்கொண்டே இருந்தான். அவனது ஆட்சியில் கொள்ளை, களவு இல்லை; பஞ்சம், பட்டினி கிடையாது; எங்கும் எல்லா வளங்களும் கொழித்தன. எல்லோரும் அமைதியாக இன்பமுடன் வாழ்ந்தனர். அவனது தமிழ்ப்புலமைபற்றிய புகழும், செங்கோலாட்சிபற்றிய சிறப்பும் அவனது பாண்டிய நாட்டிலே மட்டுமல்லாது சேர, சோழ மண்டலங்களிலும், பிற நாடுகளிலும் பரவத் தொடங்கின.

வேள் எவ்வி என்பானது மிழலைக் கூற்றம் என்ற பகுதியின் மீதும் பழைய வேளிருடைய முத்துக்கூற்றம் எனற பகுதியின் மீதும் படையெடுத்துச் சென்று, மாற்றாரை மண்டியிடச் செய்த அவனது போர்ச்செயல்களும் போர்த்திறன்பற்றிய செய்திகளும் எங்கும் பரவின. அவனைப் போர்க்களத்தில் கண்டவர்களும் அவனது போராற்றலைப்பற்றிக் கேள்விப்பட்டவர்களும், "இவனை வெல்லுவார் இவ்வுலகில் எவருமில்லை" எனக் கூறினர். எங்கும் அவன் புகழ் பரப்பினர்.

இளைஞனும் பாண்டியனின் போராற்றலையும் புகழையும்பற்றிக் கேள்விப்பட்ட சேர, சோழ மன்னர்களும் சிற்றரசர்கள் பலரும் பொறாமைப் பட்டனர். புயல் வேகத்தில் பரவிய அவனது புகழுக்கு மாசு கற்பிக்கும் வகையில் அவனை ஏளனமாகப் பேசினர்; இழித்தும் பழித்தும் கூறினர். எப்படியும் அவனை அழித்தொழிக்க வேண்டுமென்ற முயற்சியில் ஈடுபட்டனர்.

சேர, சோழ மன்னர்களும் பிற சிற்றரசர்களும் தன்னை ஏளனமாகப் பேசியதையும், தன்மீது இழிமொழி வீசியதையும்பற்றித் தன் ஒற்றர்கள் மூலம் கேள்விப்பட்ட பாண்டியன், "என்னை எதிர்த்தொழிக்க விரும்புகிற எல்லா மன்னர்களும் சேர்ந்து வந்தாலும் அவர்கள அனைவரையும்

(4-ம் பக்கம் பார்க்க)

ஒன்று சேருவீர்

1௦ ஆண்டுச் சந்தா ரூ. 8. (6-12-59) தனிப் பிரதி 16-காசு இதழ் 21

இந்த உபகண்டத்து மண்ணிலே எந்த அந்நியன் அடியெடுத்து வைத்து, இதனை என்னதாக்குவேன் என்று கூறினாலோ, அல்லது இந்த மண்ணிலே இந்தப் பகுதி என்னுடையது — எனவே எல்லைக் கோட்டை — அன்றுமுதல் இன்றுவரை இருந்து வரும் ஒரு வரம்பை மாற்றி அமைக்கவோ, அல்லது அதனைத் தன் வசமாக்கவோ முனைவானானால், அவனை எதிர்த்து முறியடிப்பதிலே நம்முடைய பங்கு என்றைக்கும் உண்டு—நிச்சயமாக உண்டு என்பது, நமது திராவிடக் கூட்டாட்சியின் குறிக்கோள்களில் ஒன்றாகும். திராவிடம் தனியாகப் பிரிந்தால், நாடு துண்டாடப்பட்டால், எதிரிகளுக்கு—அந்நியர்களுக்கு இடம் கொடுப்பதாகும் என்று நம்முடைய இலட்சியம் அறியாதார் கூறுவது எவ்வளவு கேலிக்குரியதாகுமென்பதனை இங்கு நாம் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

அந்நியரின் படையெடுப்போ ஆக்கிரமிப்போ ஏற்பட்டால் தி ரா வி ட ம் வாளா இருக்காது. ஆனால், அதே சமயத்தில் யாரையும் வலிந்து வம்புக்கிழுக்காது என்பதும் நமது இலட்சியமாகும்.

இந்த உபகண்டத்தின் எந்தப் பகுதியில் எந்த அந்நியன் அடியெடுத்து வைத்தாலும் உபகண்டம் முழுவதும், அந்தச் சமயத்தில், அ ண் ண னு க் கு ஆபத்தா? இதோ தம்பி இருக்கிறேன் என்ற முறையில் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாகப் போராடி வெற்றிகாண முன்னணியில் நிற்கும். இதில் யாருக்கும் சந்தேகம் வேண்டாம்.

சில நாட்களாகவே இமய எல்லையில் சீனரின் சிறுமதித்தனம் நடந்து வருவது யாவரும் அறிந்ததே. இந்த உபகண்டத்தின் சில பகுதிகளைத் தன்னதாக்கிக்கொள்ளும் தவறான போக்கைச் சீனா கொண்டிருப்பதன் காரணமாக ஏற்பட்டிருக்கும் கொந்தளிப்பைச் சாதாரணமாக எண்ணி வாளா இருந்துவிட முடியாது. மண்ணாசை பிடித்த வெறியரின் மண்டையில் அடித்து அவர்தம் மமதைக்கு நல்லதோர் பாடம் கற்பிக்க இந்நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் கருத்து வேறுபாடுகளை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு ஒன்று சேருங்கள் என்று அண்மையில் நேரு அவர்கள் அறைகூவல் விடுத்துள்ளார். இந்த அறைகூவலை, இவ்வுபகண்டத்திலுள்ள எல்லாரும் ஒருமுகமாக ஏற்று எதிரியின் மண்ணாசையில் மண்போடத் தயாராகுங்கள் என்று நாமும்—திராவிட முன்னேற்றக் கழகத்தினராகிய நாமும் அறைகூவி அழைக்கிறோம்.

நாட்டுக்கொரு ஆபத்தென்றால், அது, நமக்கு வந்ததென்று எண்ணும் நல்ல மனம்படைத்த பரம்பரையில் வந்த நாம், நம்முடைய பண்பின் தரத்தையும், மரபின் உயர்வையும் உலகுக்கு அறிவிக்கவும்—அறிவுறுத்தவும் இதனை ஒரு நல்ல சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி வெற்றிகாண வருவீர்—ஒன்று சேருவீர் என்று திராவிடப் பெருங்குடி மக்கள் அனைவரையும் அழைக்கிறோம்.

—[*]—

நமது புதிய மேயர்

சென்னை நகராட்சி மன்றத்தின் மேயராக மீண்டும் நமது கழக முன்னணி வீரர்களுள் ஒருவரான **அப்துல் காதர்** அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதறிந்து நமது மகிழ்ச்சியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதே போல் துணை மேயராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கும் தோழர் **தேவராசன்** அவர்களுக்கும் நமது வாழ்த்துக்களை உரித்தாக்குகிறோம்.

சென்னைமா நகருக்குத் தேவையான புனரமைப்பும், புது வாழ்வும் பெற்றுத் தருவதில் நமது மேயருக்கு நல்ல திறமையுண்டென்பதை இங்கு எடுத்துக் காட்டத் தேவையில்லை. அவர் பல அமைப்புகளோடு தொடர்பு வைத்துப் பொதுநலப் பணியாற்றி வருபவர். அவரைப் போலவே தேவராசன் அவர்களும் நீண்ட நாள் கழக உறுப்பினர் என்ற முறையில் பொதுத் தொண்டாற்றி வருபவர்.

எனவே, இவர்கள் காலத்தில் சென்னைமா நகரம் புது ஒளியைப் பெறவேண்டுமென்று விரும்பி மீண்டும் மேயரையும், துணை மேயரையும் வாழ்த்துகிறோம்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

போரில் புறங்காட்டி ஓடச் செய்வேன்!" எனச் சூளுரைத்தான்.

"எம்மைவிட வயதில் இளையவனும், படை பலத்தில் குறைந்தவனுமாகிய பாண்டியன், எல்லாப் படை பலமும் மிக்க எமக்கு எம்மாத்திரம்? எம்மால் சிரிக்கத்தக்கவர்களே அவனை ஏற்றிப் போற்றுகின்றனர்" என ஏளனமாய்ப் பேசிக்கொண்டும், எள்ளி நகையாடிக்கொண்டுமிருந்த சேர, சோழ மன்னர்கள், பாண்டியன் கூறிய சுடு சொற்களையும் கொண்டுள்ள சூளுரையையும்பற்றிக் கேள்விப்பட்டனர். 'இனியும் பாண்டியனை விட்டு வைக்கக்கூடாதென' எண்ணினர். "எப்படியும் அவனை முறியடித்துத் தீரவேண்டும்" என்ற முடிவுக்கு வந்தனர். இருபெரும் மன்னர்களோடு எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன், திதியன் என்ற ஐந்து சிற்றரசர்களும் சேர்ந்துகொண்டார்கள். எல்லோரும் சோழனுடைய தலைநகரில் கூடிப் பாண்டியனை வாகை சூடும் வகைபற்றித் திட்டம் தீட்டினார்கள்.

இருபெரும் வேந்தர்களும் ஐந்து குறுநில மன்னர்களும் தன்னை முறியடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதையும், முன்னேற்பாடாகப் படைத் திரட்டி வருவதையும் அறிந்த பாண்டியன், தன்னை அதற்குத் தயாராக்கிக்கொள்ள எண்ணித் தனது ஆற்றல்மிகு படையைத் திரட்டினான். அலைகடலென அணிவகுத்து நின்ற படை வீரர்களுக்கு முன் பாயும் சிங்கமெனத் தோன்றிப் பகைவர்களைக் கொன்றொழிக்கும் வெஞ்சினமொடு "பல்சான்றீரே! படை மறவரே! பகைவர்களாகிவிட்ட சேரனும், சோழனும் சிற்றரசர்கள் ஐவரும் என்னை இழித்தும் பழித்தும் பேசுகின்றனராம். என்னையும் நான் ஆளும் இந்நாட்டையும் புகழ்ந்து பேசுவோரும் போற்றிப் பாடுவோரும் அவர்களால் சிரிக்கத் தக்கவர்களாம், ஏதும் போர்த்திறனற்ற இளைஞனும் நான். என்னிடம் எந்தப் படைபலமும் இல்லையாம். அவர்கள் என்னைவிட ஆற்றலும் திறமையும் மிக்கவர்களாம். அவர்களிடம் மாறி மாறி ஒலிக்கும் மணிகள் கட்டினதும், பரந்த காலினையுடையதுமான யானைகளும் தேர்களும், குதிரைகளும், படைக்கலத்தொழிலிற் சிறந்த மறவர்களும் ஏராளமாய் இருப்பதாகப் பெருமிதத்தோடு கூறிக்கொள்கிறார்களாம். இப்படித் தம்மைத்தாமே பெருமைப்படுத்திக்கொள்ளும் அவர்கள் எனது வலிமைக்குக் கொஞ்சமேனும் அஞ்சாதிருக்கிறார்கள் என்பதோடு, என்னை அழித்தொழிக்கச் சினம்கொண்டுள்ளார்களாம்; சிறு சொல் பல சொல்லுகிறார்களாம். இதுவரை பொறுத்துக்கொண்டிருந்த நான் இனிப் பொறுக்க முடியாத நிலைக்கு வந்துவிட்டேன். 'இளைஞன் எதற்கும் இளையான்' என்பதை அவர்களுக்கு உணர்த்தும் வகையில் அவர்களோடு அருஞ்சமமுருக்கி அவர்களைச் சிதறடிப்பதென்று முடிவு செய்துவிட்டேன். பொருதற்கரிய போரின்கண்ணே பொருது, முரசமொடு அவர்களைக் கைக்கொண்டிலேனாகில் பொருந்திய எனது குடைநிழற்கண் வாழ்வோர் தாங்கள் சென்று தங்குவதற்கேற்ற நிழலைக் காணாது எம்முடைய வேந்தன் கொடுங்கோலனாகிவிட்டான் என்று என் குடிமக்கள் என்னைப் பழிதூற்றுமளவுக்கு நான் ஒரு கொடுங்கோலனாகுக! உயர்ந்த புலமையுடனே ஒப்பற்ற கேள்வியையுமுடைய புலவர் பெருந்தகை மாங்குடி மருதனார் உள்ளிட்டு, அவனியில் அழியாப் புகழுடன் வாழும் புலவர்கள் பலரும் என்னையும் என் அரசினையும் பற்றிப் புகழ்ந்து பாடாது, எனது நிலவெல்லையைவிட்டு நீங்கிப் போவார்களாக! என்னால் இதுவரையில் காப்பாற்றப்பட்டுவரும் உற்றார் உறவினர்கள் இன்னல் மிக அடையவும், இரப்பவர்க்கு எதுவும் கொடுக்க முடியாத வறுமை நிலைக்கு வரவுமான நிலையை நான் அடைவேனாக!" என வஞ்சினமுரைத்தான்.

இப்படி வெஞ்சினமொடு வீர முழக்கமிட்ட வேந்தனிடம் ஓடி வந்த அவனது ஒற்றர்கள், "பகைவர்கள் தலையாலங்கானத்தில் படையுடன் தங்கியுள்ளனர்" எனக் கூறினார்கள். அதைக்கேட்ட புலவர்கள், பொறுத்தது போதும், பொங்கி இனிக் களம் நோக்கிப் புறப்படுவீர்!" என்றனர். அமைச்சர்கள், "அருஞ்சமமுருக்கி அழிப்பீர் பகைவரை!" என்றார்கள். பார்வையில் கனல் கக்க, பாண்டியன், "போர்! போர்!" என்றான். பளபளக்கும் வாளுடனிருந்த படை வீரர்கள், "தயார்! தயார்!" என முழக்கமிட்டனர்.

முரசொலி கேட்டது; முழக்கம் நின்றது. பாண்டியன் தலைமையேற்றான், படை தலையாலங்கானம் நோக்கிச் சென்றது. இருதரப்பினருக்கும் ஆரம்பத்தில் நாம் கண்ட கடுமையான போர் நடந்தது. கடைசியில் பாண்டியன் வென்றான். பகை பாராட்டிய ஏழு மன்னர்களின் முடிகளையும் போர்முரசங்களையும் கைக்கொண்டான்.

அன்றுமுதல் 'எள்ளி நகையாடப்பட்ட இளைஞனும்' பாண்டியன் தமிழக வராற்றிலே "தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்" என்ற தனிச் சிறப்பிடத்தைப் பெற்றான். அவனது புகழ் எக்காலத்தும் அழியாத நிலைத்த புகழாயிற்று. அவனுடைய வீரமும் ஈரமும் வரலாற்றிலே இடம்பெற்றுள்ளது. அவனது தீந்தமிழ்ப் பாடல்கள் தேடித் தொகுக்கப்பெற்றபுறநானூற்றிலே காணக்கிடக்கின்றன.

'இளைஞன் இவன்' என எள்ளி நகையாடித் தன்னை எதிர்த்தொழிக்க சேர, சோழ மன்னர்கள் திட்டமிட்டதையறிந்து தனது போர்ப்படை வீரர்களை அணிவகுக்கச் செய்து, தீட்டிய வாளுடனும் தினவெடுத்த தோள்களுடனும் நின்றிருந்த அப்படை வீரர்களுக்கு முன்னால் நின்று பாண்டியன் நெடுஞ்செழியன் பகையரசர்களிடம் வெஞ்சினம்கொண்டு வஞ்சினமுரைத்த அத்தீஞ்சுவை கவிதை இதோ:

நகுத்தக் கனரே நாடு மீக்கூறுநர்
இளையன் இவனென உளையக் கூறிப்
படுமணி இரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையும் தேரும் மாவும்
படையமை மறவரும் உடையம் யாமென்று
உறுதுப் பஞ்சாது உடல்சினம் செருக்கிச்
சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமம் சிதையத்தாக்கி முரசமொடு
ஒருங்ககப் படேஎ னாயின் பொருந்திய
என்நிழல் வாழ்நர் செந்நிழற் காணாது
கொடியன் எம் இறையெனக் கண்ணீர் பரப்பிக்

குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக:
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவனாக
உலகமொடு நிலைஇய பலர் புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைக என் நிலவரை
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க்கு ஈயா இன்மையான் உறவே.

—புறநானூறு 72

★

தாழ்த்தப்பட்டோர் தனிச்சலுகை!

"இப்போது ஒதுக்கப்பட்டுள்ள பத்து ஆண்டுக்கால தனிச்சலுகைகள் போதவில்லை என்பதைத் தாழ்த்தப்பட்ட மக்கள் எதிர்காலத்தில் உணர்வார்களானால், அந்தச் சமயத்தில் அரசியல் சட்டத்தைத் திருத்திக்கொள்வதன் மூலம் அவர்களுக்கு வேண்டிய சலுகைகளைப் பெற்றுக்கொள்ளலாம்" என்று டாக்டர் அம்பேத்கார் அவர்கள் கூறியிருப்பதற்கொப்ப இருகிழமைகளுக்கு முன்பு, அரசியல் சட்டத்தின் 334-வது ஷரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் தனிச்சலுகைகள், 1960-ம் ஆண்டு ஜனவரித் திங்களிலிருந்து மேலும் பத்து ஆண்டுகளுக்கு நீடிக்கவேண்டும் என்ற தீர்மானத்தை, மக்கள் சபை அரசியல் சட்டத்தின் 8-வது திருத்தமாக நிறைவேற்றியுள்ளது.

1960-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் வரையில் அரசாங்கம் இந்தச் சட்டத்தைச் செயல்படுத்தியதன் மூலம் கண்டுள்ள அறுவடை என்ன?

தாழ்த்தப்பட்ட மக்கள் பெரும் பகுதியினருள் ஒரு சிறு பகுதியினரை மக்கள் சபைக்கும் மேல் சபைக்கும் தேர்ந்தெடுத்து அனுப்பியதும், விரல்விட்டு எண்ணக் கூடியவர்கள் மந்திரிகளாக வந்ததும், வேலை தரும் விஷயத்தில் தாழ்த்தப்பட்டோருக்காகச் சில விதசலுகைகள் தந்ததும் தவிர, சமுதாய அடிப்படையில், மக்கள் மனப்பாங்கு மாறக்கூடிய வகையில் எல்லோரும் சுயஉரிமையோடும், தன்மரியாதையோடும் வாழக்கூடிய அளவில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக இந்த அரசியலார் மேற்கொண்ட முயற்சிகள் தான் எத்தனை? அவைகள் தரத்தின் அடிப்படையில் கொடுத்த பலன்கள்தான என்ன?

விவசாயத்தில், மாதிரிப்பண்ணைகள் எப்போதுமே அதிக விளைச்சலைத்தான் கொடுக்கும். ஆனால் மாதிரிப்பண்ணையிலேயே எல்லா

ஒரு மாதிரிப் பண்ணை!

விளை நிலங்களும் அடங்கிவிடுவதில்லை. மாதிரிப்பண்ணைகளில் நடத்தும் விவசாய முறையை வழுவாமல் அப்படியே மற்ற நிலங்களிலும் கடைப்பிடிக்க வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசியல் பிரதிநிதித்துவம் கொடுத்திருப்பது ஒரு மாதிரிப்பண்ணையைப்

அன்பு

போன்றதுதான். அரசியலில் அம்மக்களில் சிலருக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டுள்ளது என்பதினாலேயே நாட்டில் எஞ்சியிருக்கும் கோடிக்கணக்கான தாழ்த்தப்பட்டோர் சமுதாய உரிமையைப் பெற்றுவிட்டனர் என்பது பொருளன்று. எனவே, மாதிரிப்பண்ணைக்கு அப்பாற்பட்டு விளை நிலங்கள் எப்படி அதிக அளவில் எஞ்சியிருக்கின்றனவோ அதேபோன்று பிரதிநிதித்துவம் அளித்ததோடு சாதிப் பாகுபாடுகள் அழிந்து ஒழிந்துபடவில்லை. நிறைய வளரவிடப்பட்டுத்தான் வருகின்றன.

ஆகவே, இன்னும் பத்து ஆண்டுக் காலத்துக்கு அரசியல் பிரதிநிதித்துவம் அளிக்கும் சட்டத்தை நீடித்திருக்கிறோம என்பது, மாதிரிப்பண்ணையில் அதிக விளைச்சலைக் காட்டிவிட்டோம், இனி என்ன? என்றுகேட்பதற்குத் தான் ஒப்பாகும்!

சாதிகளற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்குவதில் நாங்கள மற்றஎல்லாக் கட்சிகளையும்விட முன்னணியில் நிற்கிறோம் என்று கூறுகிறது இந்த நாட்டின் எல்லா அரசியல் பீடங்களிலும் அமரும் வாய்ப்பைப் பெற்றிருக்கும் காங்கிரஸ். உண்மை அதுவானால், ஐந்து ஆண்டுகளுககு ஒருமுறை வந்து போகும் தேர்தல்களில் பொதுத் தொகுதி இடங்களில் எத்தனை தாழ்த்தப்பட்டோரைநிற்கவைத்து வெற்றிக்காகப்பாடுபட்டிருக்கிறது? தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனித் தொகுதிமுறை கொடுத்து, அப்பகுதியினரின் முன்னேற்றத்திறகாகப் பாடுபடுகிறோம் என்று சொல்வதைக் காட்டிலும், இது போன்ற ஒரு முறையைப் பின்பற்றுவது மிகவும் சிறந்த ஒன்றுயிற்றே? மேலும் இதுபோன்ற முறைகளைப் பின்பற்றுவது சாதி உணர்ச்சிகள் எந்த அளவு நாட்டில் மறைந்திருக்கின்றன என்பதைக் கண்டறிவதற்கான அளவுகோலாகவும அமையுமே? 1957-ம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் இதுபோன்ற முறையில் நின்று வெற்றிபெற்று வந்தவர்கள் இந்தியத் துணைகண்டத்துக்கே ஒன்பதுபேர்தான் (மக்கள் சபை பொறுத்த அளவில்) இந்த ஒன்பதுபேரும் நிச்சயமாகக் காங்கிரஸ் கட்சியில் வந்தவர்களாக இருக்கமுடியாது. சிலர் மற்றைய கட்சிகளுக்கும் சொந்தமானவர்களாயிருக்கலாம். இந்தியாவிலேயே பெரிய கட்சி என்று கூறப்படும் காங்கிரஸ் இம்முறையை மிகப் பெரும் அளவில் கடைப்பிடித்து நடத்திக் காட்டினால் என்ன?

இன்னும் பத்து ஆண்டுகளுக்குப பழைய சட்டத்தைப் புதுப்பித்திருக்கிறோம் எனபது சாதி முறைகள் நீங்குவதற்கான எல்லாக காரியங்களையுமே செய்துவிட்டோம் என்ற தவறான முறையைத்தான காங்கிரசுக்காரர்களுக்கு கொடுக்கும். இதுபோன்று, தனிப்பிரதிநிதித்துவம் கொடுப்பதனால் மட்டுமே, சாதிப் பிரச்சினையை ஒழித்துவிடலாம் என்று இன்று பலர் தவறாக நினைக்கிறார்கள் என்பதனால் தானோ என்னவோ "தாழ்த்தப்பட்டோர் தாழ்த்தப்படாதோர் என்று அரசாங்க அளவிலேயே பாகுபடுத்தும் முறை ஆண்டுக்கு ஆண்டு குறைந்து கொண்டே வந்து, வருமானம்—

(7-ம் பக்கம் பார்க்க)



வறுமை கொடிது! ஏழையாகப் பிறப்பது அதைவிடக் கொடியது!! ஏழ்மையும், வறுமையும் மனித நெஞ்சங்களை அலைக்கழிக்கும் கொடுமையினைச்சொல்லிமுடியாது.

அந்த ஊருக்கு நான் புதியவன் அல்ல. அந்தச் சத்திரத்தில் தங்குவதும் இதுதான் முதல் முறையும் அல்ல. மாதத்திற்கு ஒருமுறை அந்த ஊருக்குச்செல்வேன். மாதத்தில் மூன்று நாட்கள் அந்தச் சத்திரத்தில் தங்குவேன்.

சத்திரத்தைக் காவல் புரியும் அந்த வறுமைக் குடும்பத்தை எண்ணிக் கலங்காத நாட்கள் இல்லை. வறுமைக் குடும்பத்திற்காகக் கலங்கினேன் என்று சொல்வதைவிட, அந்தப் பெண்ணிற்காக இரங்கினேன் என்று சொல்வதுதான் பொருந்தும்.

வழக்கம்போல் அந்த ஊருக்கு வந்தேன்; அந்தச் சத்திரத்தில் தங்கினேன்.

அன்று இரண்டாவது நாள். காலைநேரம் தேய்ந்து நடுப்பகல் மலர்ந்தது. வெளி அலுவல்களை முடித்துக்கொண்டு, சத்திரத்திற்குத் திரும்பினேன். சத்திரத்தில் முன் வாயிலில் "பெட்டி"க் கடை வைத்திருக்கும் பெரியவரிடம்பேச்சுக் கொடுத்தேன். பொழுதுபோகவில்லை என்றால் அந்தப் பெரியவரிடம் சென்று பொழுதைக்கழிப்பது வழக்கம்.

அந்தப் பெரியவர் காவி உடைதான் உடுப்பார். நெற்றியில் திருநீறும், கழுத்தில் உருத்திராக்க மணியும், வாயில்தேவாரமும், முகத்தில் புன்சிரிப்பும்-எல்லாம் அவரை ஒரு துறவி என்று எடுத்துக் காட்டும்.

உருவத்தில் துறவி; பற்றற்றவர். உள்ளத்தில் நாலு காசு சேர்க்கவேண்டும்; வைத்திருக்கின்றநாலுகாணியை எட்டுக்காணியாக்கவேண்டும்; வாழ்கின்ற ஓட்டு வீட்டை மாடி வீடுஆக்கவேண்டும்; சேர்க்கும் பொருளால் அவர்அன்பு மனைவியை மகிழச்செய்யவேண்டும், என்ற எண்ணம் உடையவர். அவரிடம் அணுகிப் பேசினால் அந்த ஊரின் செய்திகளைச்சேகரிக்கலாம். சுருக்கமாக அவர் அந்த ஊரின் விளம்பர இலாகா எனலாம்.

* * *

"வா'ங்க, தம்பி!" பெரியவரின் புன்முறுவலோடு எனக்கு வரவேற்புக் கிடைத்தது.

உலக விவகாரம் தொடங்கியது.

"உலகம் கெட்டுக் கிடக்குதுங்க! யாரையும் நம்பமுடியல்லே!"

"நாமும் இந்தக் கெட்ட உலகத்திலேதான் காலை ஊன்றி இருக்கிறோம்!" என்றேன்.

"நீங்க புரிஞ்சுகல்லே!"

"எதைச் சொல்றீங்க?"

"தம்பி! சத்திரத்து உள்ளே போய் பாருங்க, புரியும்."

சத்திரத்துக்காவற்காரி இரைந்து பேசிக்கொண்டிருந்தாள். நாலைந்து முரடர்கள் அவள் அறைக்கு முன்னால் உலவிவந்தார்கள். அறைக்கு உள்ளே "லொக், லொக்" என்று அவள் கணவன் இருமித் துப்பிக்கொண்டிருந்தான். மற்றொரு மூலையில் அவள் பெண் தேம்பித்தேம்பி அழுதுகொண்டிருந்தாள்.

"மூதேவி!... எவண்டி கொடுத்தான்? இந்த இராணிக்குச் சும்மா தூக்கிக் கொடுத்திடுவானா? இதுக்குத்தானா உன்னை வளர்த்தேன்?" எரிந்து விழுந்தாள் அந்தக் காவற்காரி.

"அஞ்சலை!...... ஏன் இப்படிக் கத்தறே?" உள்ளே இருந்துஅவள் கணவன் குரல் கொடுத்தான்.

"நீங்க வாயை மூடுங்க. மானம் போச்சி, இந்தத் தரித்திரம் பிடித்தவளாலே. தூ!... இப்படியா பிழைக்கச் சொன்னாங்க?"

"அம்மா!... விடுங்க... ஏதோ தெரியாம செய்ஞ்சுடுச்சி... அவன் மட்டும் என் கையிலே கிடைக்கணுமே... அவன் எலும்பை நொறுக்கி நாய்க்குப்போட்டுடுறேன் பாரு"... ஒரு முரடன் அவளைச் சமாதானப்படுத்திச் சவால் விட்டான்.

ஏனோ என் நெஞ்சம் அதைக் கேட்டதும் துணுக்குற்றது!

நிலைமை ஒருவாறு விளங்கியது. அந்தப் பெட்டிக்கடைப் பெரியவரிடம் வந்தேன்.

"பார்த்தீங்களா, தம்பி?" பெரியவர் குரலில் ஏளனம் மறைந்திருந்தது.

"ஒன்றும் விளங்கவில்லையே?" குழம்பிய மனத்தோடு கேட்டேன்.

"புரியாது, தம்பி; புரியாது...... அந்த அஞ்சலை அம்மா பொண்ணு உங்களுக்குத் தெரியுமில்லே...... அந்தப் பொண்ணு வயசுக்குவந்து மூணு வருசமாவுது!... எத்தனை நாள ஊட்லே குந்திக்கிடப்பது?... வெளியே கிளம்பிட்டா பவனிக்கு!"

என் நெஞ்சில் முள் தைத்தது போல் உணர்ந்தேன்.

"ஏழை!... வறுமையால் வாடி இருப்பவள்... அப்படி இருக்காது ...அவளும் நல்லவள்... ஒழுங்காக இருப்பவள்... தவறாக நினைக்காதீங்க..." என்றேன்...

"உங்களுக்கு உலகம் தெரியாது, தம்பி!... ஏழைங்க இந்த வழிக்கு நிதானமா இறங்கறாங்க... வறுமையைப் போக்க அந்த வழியைக் கண்டுபிடிச்சிருக்காங்க... பாருங்க தம்பி... அந்தப் பொண்ணு நல்ல சிகப்பு; நல்ல அழகி...... அவ அழகுக்குப் பத்து ரூவா தானா கொடுக்கலாம்?... அதிலேயும் வறுமை. பஞ்சம்... ஊம்."

"அந்தப் பெண்ணை நம்புங்க... அந்த வழிக்குப் போகமாட்டாள்."

"ஊம்! நீங்க என்ன வெளுத்த தெல்லாம் பாலுன்னு நினைச்சுகிட்டுப் பேசறீங்களே?... எவன் தம்பி சும்மா தூக்கி அவகிட்டே பத்து ரூவாயைக் கொடுத்திடுவான்......? அவ, வறுமையையும், பட்டினியையும் பார்த்து இரங்கி அந்த மகராசன் பத்துரூவா கொடுத்தானும்!... அந்தப் பொண்ணு சொல்லுது!... நம்பமுடியுமா?

"இரக்கப்படறவங்க இந்த உலகத்திலே நிறையப்பேர் இருக்காங்க தம்பி... ஆனா அந்தப் பொண்ணு சொல்றதுபோல, பணத்தைக் கொடுத்து இரக்கப்படறவங்க இந்த உலகத்திலே யாரு தம்பி இருப்பாங்க."

"ஏன் இருக்கக்கூடாது?"

"அப்படி இருந்தா, அவன் இந்த மலைப்பட்டிக்காட்டிலே இருக்கிறவங்க போல திருவோடு ஏந்த வேண்டியதுதான்... ஊம்! விடுங்க தம்பி அந்த வேதாந்தத்தை."

"தம்பி!...... புழுதான் குளவி ஆகுது... இதை யாராவது நம்புவாங்களா?...... அதுமாதிரிதான் இதுவும்..."

"அவள் ஏழைக் குடும்பத்தில்—வறுமைக் குடும்பத்தில் பிறந்துவிட்டதால் ... அந்தத் தொழில் செய்துதான் பத்து ரூபாய் பெற்றிருக்கிறாள் என்று சொல்ல வேண்டாம்"

நீங்களும் நானும் அவ சொல்றதை நம்பலாம்... இந்த உலகம் நம்புமா?...ஒரு பருவப் பெண்... அழகான பெண்...ஏழைப்பெண்... வறுமையால் வாடி, பட்டினியால் வதங்கும் பெண்...மானத்தை விற்காமல் நாலு காசு வைத்திருந்தாலும்...அதை இந்தப்பாழும்உலகம் நம்பாது தம்பி...அதற்குத் தகுதி வேண்டும்...அந்தஸ்து வேண்டும் செல்வாக்கு வேண்டும்"

அவர் சொல்வது எனக்கு உண்மை எனத் தெரிந்தாலும், ஏனோ என் மனம் அவர் கூற்றை ஒப்பவில்லை.

வறுமைக்கும், ஏழ்மைக்கும் இரங்கிய அவளிடம் பத்து ரூபாயைக் கொடுத்தேன்! அவளிடமிருந்து எதையும் எதிர்பார்த்து ரூபாயைக் கொடுக்கவில்லை! முதலில் அவள் வாங்க மறுத்தாள். பிறகு ஒரு அண்ணன் என்ற உறவில்தான் அவள் வாங்கினாள். வேறு எந்தவித உறவிலும் அவள் வாங்கவில்லை. இதை அவளும், நானும் உணர்ந்தது; அறிந்தது.

அதே சத்திரத்தில் நான் தங்கி இருப்பது அவளுக்கு நன்கு தெரியும். "யார் கொடுத்தது?...எவன் கொடுத்தான்? ... சொல்லு... அவன் காலையும், கையையும் முறிச்சுடறேன்" என்று அந்த முரடர்கள் உறுமியதும் அவள் அறிவாள். ரூபாயைக் கொடுத்தது நான்தான் என்று அவள் மிக எளிதில் என்னைக் காட்டிக்கொடுத்து அந்தப் பெரும் பழியிலிருந்து தப்பி இருக்கலாம். ஆனால் அவள் என்னைக் காட்டிக்கொடுக்கவில்லை! காட்டிக் கொடுத்திருந்தால் நான் உண்மையைச் சொன்னாலும், அந்தச் சகோதர உறவை அந்த மூடர்கள் — முரடர்கள் நம்பமாட்டார்கள்; இந்த உலகமும் நம்பாது! இதை அவள் நன்கு அறிந்தாள் போலும்!.

செல்வம் வந்தால் உறவு முறையும் மாறிவிடும்போல் இருக்கிறது! ஏழைப்பெண் அந்தப் பத்து ரூபாயைப் பெற்றதால் எனக்கும் அவளுக்கும் உண்டாக்கிய அந்த உறவை நீங்களும் நம்புகிறீர்களா?

★

5-ம் பக்கத் தொடர்ச்சி

திறமை' (Income—cum—Merit Basis) அடிப்படையில் தனிச் சலுகைகள் காட்டவேண்டும்" என்ற ஒரு கருத்தைத் தாழ்த்தப்பட்ட வகுப்பிற்காக நியமிக்கப்பட்டிருக்கும் கமிஷனர் எல். எம். ஸ்ரீ கண்ட் என்பார் வெளியிட்டிருக்கிறார்.

"கக்கனைப் பார்" என்று காமராசர் கூறலாம். "ஜகஜிவன்ராமைப்பார்" என்று நேரு பெருமைப் படலாம். ஆனால் "எங்களைப் பாருங்கள் என்று, இன்றும் சமுதாயத்தில் சம உரிமை மறுக்கப்பட்டு வரும் எண்ணற்ற உள்ளங்கள் நொந்த குரலில் கூறுகின்றனர்.

தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒரு மத்திய மந்திரி எல்லாக் கோவில்களினுள்ளும் சென்றிருக்கிறார் என்பதனாலோ, ஒரு மாநில மந்திரி சமமாக மதிக்கப்பட்டார் என்பதனாலோ, ஒரு மக்கள் சபை உறுப்பினர் உணவு விடுதிகளில் அனுமதிக்க மறுக்கப்படவில்லை என்பதனாலோ, இந்த நாட்டில் எஞ்சியுள்ள பலகோடி தாழ்த்தப்பட்டோர் எல்லோரும் மேற்கண்டவர்களைப்போன்ற உரிமையும் சம அந்தஸ்தும் வழங்கப்படுகிறார்கள் என்பது பொருளல்ல. தாழ்த்தப்பட்டவர்களுக்காகத் தனிச் சலுகைகளும் பிரதிநிதித்துவமும் அளிக்கப்பட்டிருக்கிறது என்ற ஒரே சட்டத்தைத்தான் காங்கிரஸ்காரர்கள் நாள் தவறாமல் பிரச்சாரம் செய்கிறார்களே தவிர, "எட்டி நில்! தீண்டாதே!" என்று சொன்னால் சிறைத் தண்டனை உண்டு என்று, கூறும் சட்டத்தைப் படத்தால் விளக்கி சுவர்களில் ஒட்டுவதற்குக்கூட நெஞ்சில் துணிவில்லாதாவர்களாகக் காட்டிக் கொண்டனர் சில ஆண்டுகளுக்கு முன்பு! சென்னை அரசு செய்யத் தவறிய அந்த நல்ல காரியத்தைத் திராவிட முன்னேற்றக் கழகம் செய்யவேண்டி வந்தது!

தாழ்த்தப்பட்டோருள் மிகச் சிறு பகுதியினரைக் கொண்டுபோய் செயற்கையாக ஆட்சிப் பீடத்தில் அமர்த்துவதும், அலுவலகங்களில் வேலைகள் கொடுப்பதும் விவசாயத்தில் மாதிரிப் பண்ணைகளில் விளைச்சலைக் காட்டுவது போலத்தான், அளவு சிறியதாகவும் கவனம் அதிகமாகவும் இருப்பதால், மாதிரிப்பண்ணைகள் அதிக விளைச்சலைத்தான் கொடுக்கும், ஆனால் மாதிரி பண்ணையோடு விளைநிலங்களே முடிந்து விடுவதில்லை.

இந்த நாட்டின் எண்ணற்ற தாழ்த்தப்பட்டோருள் ஒரு சிலருக்கு எடுத்துக்காட்டான வாழ்வு கொடுக்கப்பட்டிருக்கும் இந்நேரத்தில், மிகுதியிருக்கும் அத்தனை பேரும் அன்றாட வாழ்வில் சம உரிமைகள்கூட மறுக்கப்படும் நிலையில் இருக்கின்றனர்.

இத்துறையில் ஆட்சியாளருக்கு எதிர்பார்த்த அறுவடை இட்டவில்லை. காரணம், "மாதிரிப் பண்ணையின்" விளைச்சலில்தான் தங்கள் முழுக்கவனத்தையும் செலுத்துகின்றனரே தவிர, அதற்கடுத்து, அதைவிட முக்கியமானது "விளைநிலங்கள்" நிறைய உள்ளனஎன்பதையேநினைவுகொள்ளத் தவறுகின்றனர். விளைநிலங்களில் அதிக அறுவடை பெறுவதற்காகத்தான் மாதிரிப் பண்ணைகளே தவிர, மாதிரிப் பண்ணைகளோடு பலன் முடிந்துவிடுகிறது என்பதற்காக அல்ல.

★

பழைய கடிகார ரிப்பேர்த் தொழிலைச் செய்து வந்தார்!

தொழிற்கல்வி முடிந்ததும் அவர் சில புதிய விவசாயக் கருவிகளுடன் தனது சொந்த ஊர் திரும்பினார்! ஊர் திரும்பிய என்றி பல்வேறு பொது மன்றங்களில் சேர்ந்து பணியாற்றினார்! அந்தக் காலத்தில் அவர் 'கிளாராபிரியண்ட்!' என்ற ஒரு மங்கையைக் காதலித்தார்! 1888-ம் ஆண்டு அந்த மங்கை நல்லாளையே அவர் மணந்துகொண்டார்! அந்தத் திருமணமூலம் அவருக்கு நாற்பது ஏக்கர் நிலம் பரிசாகக் கிடைத்தது! அந்த நிலத்தில் ஒருபுதுவீடு கட்டிக்கொண்டார்! புதுமணவாழ்க்கை அவருக்குப் பேரானந்தத்தைத் தந்தது! சில நாட்களுக்குப் பிறகு தனது இளமனைவியுடன் டெட்ரோயிட்டுக்குச் சென்றார். அங்கு ஒரு தொழிற்சாலையில் அவருக்கு வேலை கிடைத்தது! ஓய்வு நேரங்களில் காலத்தை வீணாக்காமல் கடிகார ரிப்பேர்த் தொழிலையும் அவர் செய்துவந்தார்!

தொழிற்சாலையில் அவருடைய எண்ணமெல்லாம், தான் எப்படியாவது ஒரு புதிய மோட்டார்கார் செய்யவேண்டுமென்பதுதான்! அதற்கான முயற்சியில் அவர் தீவிரமாக ஈடுபட்டார்! அவரது எண்ணங்கள் உயர்ந்ததுபோலவே, அவரது உத்தியோகமும் உயர்ந்து கொண்டிருந்தது! அவர் பணியாற்றிய எடிசன் கம்பெனியின் பிரதம இஞ்சினியர் பதவி அவருக்குக் கிடைத்தது! அதனால் பொருளாதாரத்துறையில் நல்ல முன்னேற்றத்தை அவர் பெற்றார்!

சொந்தத்தில் சிறுதொழிற்சாலை ஒன்றை அவர் துவக்கினார். அந்த தொழிற்சாலையில் இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து நடத்திய ஆராய்ச்சியின் விளைவால் 1895-ம் ஆண்டு, தனது முதல் மோட்டார் காரை அவர் தயாரித்தார்! அந்தக் காரின் சக்கரங்கள் சாதாரண சைக்கிள் சக்கரங்களாகத்தான் இருந்தன! சீட்கூட சைக்கிள் சீட்தான்! பிரேக் இல்லாமல் ஓடக்கூடிய அந்தக் காருக்கு 20-மைல் வேகத்தில் ஓடக்கூடிய கருவி ஒன்றும், 10-மைல் வேகத்தில் ஓடக்கூடிய கருவியொன்றும் பொருத்தியிருந்தார்!

என்றி கண்டுபிடித்ததை விடச் சிறந்த வண்டிகள் அந்த காலத்தில், பிரிட்டன், பிரான்ஸ், முதலிய நாடுகளில் ஓடிக்கொண்டிருந்தன. அந்தச் செய்தி என்றியின் காதுகளுக்கும் எட்டியது. அமெரிக்காவில் செய்யப்படும் வண்டிகளில் தனது கண்டுபிடிப்புதான் உயர்ந்ததாக இருக்கவேண்டுமென்பது அவர் விருப்பம்! அந்த எண்ணம் வெற்றி பெறுவதற்கான முயற்சியிலும் அவர் தீவிரமாக ஈடுபட்டார்!

பல துறையிலும் முன்னேறாத ஒரு வண்டிதான் என்றியினுடைய முதல் படைப்பு. என்றாலும், அதில் கிடைத்த அனுபவமும் ஆற்றலும் புதியவண்டிகள் உருவாவதற்குப் பெரிதும் துணை புரிந்தன. எடிசன் கம்பெனியில் அவர்செய்து வந்த பணி அவரது ஏனைய முயற்சிகளுக்குப் பெரும் தடையாக இருந்ததால், அந்த வேலையைவிட்டுவிட்டுச் சில நண்பர்களுடன் கூட்டாகச் சேர்ந்து "டெட்ரோயிட் ஆட்டோமோபைல்ஸ்" என்ற ஒரு நிலையத்தை உருவாக்கினார்! ஆனால் கூட்டாளிகளுடன் ஏற்பட்ட சச்சரவுகள் காரணமாக அந்தக் கம்பெனியையும் விட்டுவிட்டு, தனது சொந்த முயற்சியில் "காடிலாக் ஆட்டோமொபைல்ஸ்" என்ற கம்பெனியைத் துவக்கினார். அது நல்ல பயன் தந்தது. மிகவிரைவாகச் செல்லக்கூடிய புதிய மோட்டார் ஒன்று அங்கே உருவாயிற்று. அதைக்கண்ட அமெரிக்க மக்கள் வியந்தனர்! பேராச்சரியம் என்று அதனை எண்ணினர். அது என்றியின் புகழை அகில உலகிலும் வேகமாகப் பரப்பியது!

வெற்றி மாளிகையின் படிகளில் ஏறத்துவங்கிய என்றி தனது வேகத்தை அதிகப்படுத்தினார்! ஏராளமான புதிய கார்கள் அங்கு தயாராயின! அவைகள் கிருஸ்மஸ் கேக்குகள் விற்பனையாவதுபோல் விற்பனையாயின! காலமென்னும் காலண்டரின் சில இதழ்கள் கிழித்தெறியப்பட்டன. 1908-ம் ஆண்டு நவீன வசதிகள் அத்தனையும் பொருந்திய புதிய தொழிற்சாலை ஒன்றை உருவாக்கினார் என்றி! அங்கே தயாரித்த கார் ஒன்று ஆயிரம் டாலருக்கு மக்கள் பெற்றனர்!

என்றியின் முன்னேற்றம் கண்டு பொறாமைகொண்ட சிலர் அவரின் தயாரிப்புகள் மோசடி என்று நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர்! வழக்கு என்றிக்குச் சாதகமாகவே முடிந்தது! என்றி தனது தொழிற்சாலையில் வேலைசெய்த தொழிலாளர்களிடம் அன்பாக நடந்து அவர்களிடம் பெருமதிப்பைப் பெற்றார்! அங்கு தரப்பட்ட ஊதியம் வேறு எங்கும் தொழிலாளர்களுக்குத் தரப்படவில்லை!

இரண்டாவது உலகப்போர் நடைபெற்ற காலங்களில், போர்க்கார்களும், கப்பல்களும், ஆகாய விமானங்களும் அங்கே செய்யப்பட்டன! உலகெங்கும் தனது புகழைப் பரப்பிய என்றி 1944-ம் ஆண்டு, தனது மகன் இரண்டாவது என்றிபோர்டிடம் பொறுப்புகளை ஒப்படைத்துவிட்டுஓய்வெடுத்துக்கொண்டார்! ஆனால் அந்த இடைக்கால ஓய்வில் அவர் மகிழ்ந்தாரில்லை! நிரந்தர ஓய்வு அவரை நாடிவந்தது! 1947-ம் ஆண்டு அவர் காலமானார்! ஆனால் தொழிலில் அவர் கண்டவெற்றி இன்றளவும்—மனித சமுதாயம் உள்ளளவும் அவர் புகழ் பாடிக்கொண்டிருக்கிறது!

★

மணல் வெளியைப் பண்ணை நிலமாக்க......'

போலியாக்கிரைலாமைட் என்ற கலவையைத் தெளிப்பதன் மூலம், மணல் வெளியை செழிப்பான பண்ணை நிலமாக்க முடியும் என்று, சோவியத் விஞ்ஞானப் பேரவை அறிஞர் யூரி அருமோவ் என்பவர் நிலைநாட்டியுள்ளார்.

எனவே, "மண் வள அமைப்புப் பொருள்கள் உருவாக்கப்பட்டால், 1840ல் உலோக உரம் தோன்றியது போன்ற ஒரு மகத்தான நிகழ்ச்சியாக அது கருதப்படும், விவசாய அரங்கைப் பொறுத்த மட்டில்" என்று இவான் தையூரின் என்ற சோவியத் பேரறிஞர் முன்பு கண்ட கனவு இப்பொழுது நனவாகி வருகிறது எனலாம்.

மணற் பாங்கான இடத்தில் போலியாக்கிரைலாமைட் கரைசலைத் தெளித்தால், உடனே அம் மணற்பரப்பின்மீது ஒருமெல்லிய, ஆனால் நிலைத்திருக்கும் திரை ஒன்று உருவாகிவிடுகிறதாம். பிறகு அது மணலைக் கெட்டிப்படுத்துவதுடன், உரமாகவும் செயலாற்றுகிறதாம்.

உழைப்பால் உயர்ந்த 'என்றி!'

கி. சோழன்

ஐக்கிய அமெரிக்கக் குடியரசில் பொருளாதாரப்போர் மும்முரமாக நடந்துகொண்டிருந்த காலமது! தென்—வட அமெரிக்க மக்களிடையே பலத்த போட்டி நிலவி வந்தது! ஆமைகளாய் ஊமைகளாய், அடிமைப்பட்டு அடங்கி வாழ்ந்து வந்த நீக்ரோ மக்கள் தங்களது ஒப்பற்ற தலைவன் ஆப்ரகாம் லிங்கன் தலைமையில் விடுதலைப்போர் நடத்திவந்த காலமது! அந்த வரலாற்று முக்கியத்துவம் பெற்ற காலத்தில்தான் உலகப்புகழ் பெற்ற தொழில் மேதை "என்றி போர்ட்" பிறந்தார்.

உலகெங்கும் விடுதலைக் கிளர்ச்சிகளும் மறுமலர்ச்சி எண்ணங்களும் வளர்ந்துவந்த நேரமது!

1863-ம் ஆண்டில் டெட்ரோயிட் நதிக்கரையில் உள்ள 'ஸ்பிங் வெல்ஸ் டவுன்ஷிப்'' என்ற இடத்தில் என்றி பிறந்தார். ஒரு ஐரிஷ் குடும்பத்தைச் சார்ந்த அவருடைய பெற்றோர்கள் கொடும்பசியின் கோரப்பிடிப்பிலிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்வதற்காக அமெரிக்காவில் குடியேறியவர்களாவர், அவர்கள் அயர்லாந்தைவிட்டு, அமெரிக்காவில் குடியேறியது, 'மக்கிகன் பிரதேசம்'' என்ற பகுதியிலாகும். அங்கு அவர்கள் வந்ததும் முதலில் விவசாயத் தொழிலில் ஈடுபட்டனர்! அந்தக் காலத்தில்தான அமெரிக்காவில் பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருந்தது.

என்றியை அங்குள்ள உயர்நிலைப்பள்ளியில் சேர்த்தனர் அவருடைய பெற்றோர்கள்! கல்வி கற்பதில் என்றி ஒரு சாதாரண மாணவனுடைய நிலையிலேதான் இருந்தார்! பள்ளிப்படிப்பு முடிந்ததும், தந்தைக்குத்துணையாக வயல்வேலைகளில் உதவுவார்! என்றாலும் குழந்தைப்பருவம் முதலே என்றியினுடைய நாட்டமெல்லாம் விவசாயத்தைவிடத்தொழில்துறையில்தான்! சில நாட்களிலேயே சிறிய—பெரிய கடிகாரங்களைப் பழுது பார்க்கும் பணியினை அவர் கற்றுக் கொண்டார்! ஊதியம் எதுவும் பெருமல் அந்தப் பணியை அவர் மற்றவர்களுக்குச் செய்துதந்தார்! என்றியின் அறிவாற்றலில் பொருமை கொண்ட சிலர் ஒரு முறை ஒரு கடிகாரத்தை முழுவதும் பழுதாக்கி என்றியிடம் கொடுத்தார்கள்! தன்னைப் பரிசோதிக்கத்தான் அவர்கள் அப்படிச் செய்கிருர்கள் என்பது தெரிந்தும் அவர் பொறுமை இழக்காமல் அதனைச் செப்பனிட்டுத் தந்தார்! பொருமைக்காரர்கள் வெட்கித் தலைகுனிந்தனர்!

அவரது திறமையும் எல்லோருக்கும் புரிந்தது! வரவர அவரது எண்ணங்கள் பெரும், பெரும் இயந்திரங்கவில் சென்றது! சில நாட்களில் இரயில் என்ஜின் தொழிலை அவர் கற்றுக்கொண்டார்! தனது முயற்சியாலேயே ஒரு ஆவி என்ஜினை அவர் உருவாக்கினர்! அதனை ஒரு வண்டியுடன் இணைத்துக் குதிரை இல்லாமல் ஓடச்செய்தார்! ஆனல் என்றியின் இந்தச் செயல்களெல்லாம் அவருடைய தந்தைக்குச்சற்றும் பிடிக்கவில்லை. இயந்திரங்களின் வளர்ச்சியில் அவருக்கு நம்பிக்கை பிறக்கவில்லை. அடுத்து வருவது இயந்திர உலகமென்றே, தனது செல்வன் அதற்கு வழிகாட்டியாக இருப்பான் என்றே அவர் சற்றும் எதிர்பார்க்கவில்லை! அவர் நம்பிக் கொண்டிருந்ததெல்லாம் வெறும் ஏரும் கலப்பையும்தான்! ஆனல் என்றிக்கோ அந்த விவசாயத் தொழில் சற்றும் பிடிக்கவில்லை! இந்தத் தொழில்களையெல்லாம் என்றி கற்றுக்கொண்டது தனது பதினலாவது வயதில்தான் என்பதை எண்ணும்போது வியக்காமல் இருக்க முடியவில்லை!

அந்தக் காலத்திலேயே என்றியின் தாயார் காலமனர்! அதற்குப் பின் அவருக்கு வீட்டில் இருப்பது பிடிக்கவில்லை! எங்காவது வெளியூர்களுக்குச் சென்று இயந்திரத் துறையில் மேலும் பலவற்றைப் பயில வேண்டுமென்று அவர் உள்ளம் எண்ணியது! ஆனல் தந்தையின் கண்டிப்பின் காரணமாகப் பதினறு வயதுவரையில் அவர் எங்கும் செல்லமுடியவில்லை! பதினேழுவது வயதில் அவர் தனது வீட்டைவிட்டு, டெட்ரோயிட்டிலுள்ள ஒரு இயந்திர உற்பத்தித் தொழிற்சாலையில் போய் வேலையில் அமர்ந்தார்! அறிவாற்றலோடும், சுறுசுறுப்போடும், வேலைசெய்யும் என்றியைச் சகதொழிலாளர்கள் கொடூரமான கண்களுடனேயே நோக்கினர்! மிகவிரைவிலேயே அவர் ஒரு சுரங்கத் தொழிற்சாலையிலும், இயந்திரத் தொழிற்சாலையிலும் தொழிற்பயிற்சி பெறச் சென்றுர்! அங்கு பயிற்சி பெற்று வந்த காலத்தில் தனது செலவினங்களுக்காக, அவர் தான்கற்று

சிறு கதை—கற்பனை கலந்தது.

குதிரை வண்டிக் குமரன்

எம். வி. துரை

ஒருமணி நேரத்திற்கு முன்பாக வந்து சேரவேண்டிய அந்த மெயில் வண்டி சுமார் ஒன்பது மணிக்கு வந்து சேர்ந்தது ஏலூர் சந்திப்பு நிலையத்தில். அவ்வமயம் ஒரு வருமே இல்லாது வெட்ட வெளியாகத் தோன்றிய அந்த நடைபாதை ஒரே கூட்டமாகக் காட்சியளித்தது, அவ்வளவு பிரயாணிகளையும் அந்த வண்டி ஏற்றி வந்ததால் இழுக்க முடியாமல் மெதுவாக வந்ததோ என்னவோ, என்றுகூட நினைக்கலாம். வண்டியிலிருந்து ஒருவர்பின் ஒருவராக பெட்டி படுக்கையுடன் இறங்கிக் கொண்டிருந்தார்கள்.

அந்தச் சமயத்திலே போர்ட்டர்களின் "கூலி' "கூலி" என்ற சப்தம் பிரயாணிகள் செவியிலே ஒலித்துக் கொண்டு இருந்தது. இரண்டாவது வகுப்பு அறையில் இருந்த ஒருவர் "ஏய்! போர்ட்டர்" என்று அழைக்க, என்னசாமி எங்கு போகணும் என்று ஓடினன் அந்தப் போர்ட்டர். இந்தப் பெட்டி தவிர, எல்லாச் சாமான்களையும் தூக்கு என்ருர். போர்ட்டர் மகிழ்வோடு ஐயா பெரியவர்போல் இருக்கு; இன்றைய பொளப்புக்குப் பஞ்சமில்லை என்று, படுக்கை, மற்ருெரு பெரிய பெட்டி இவைகளை மூச்சுத்திணறத் தூக்கிக்கொண்டு சென்ருன.

'எங்கே சாமி போகணும்" என்ருன் போர்ட்டர். டாக்சி ஒன்று பாரப்பா, வசதியுள்ள ஓட்டலில் தங்கியிருந்துவிட்டு, நாளை தான் சட்டசபை போய் வரணும் என்ருர். அவர் கூறியதிலிருந்து இவர் ஒரு முக்கிய நபராக இருக்கவேண்டும், இல்லேன்னு பெரிய மனிதர்களுக்கு வேண்டியவராக இருக்கவேண்டும் என்று யூகித்துக்கொண்டான். அப்போது, ஒரு டாக்சிகூட இல்லை. ஒரு குதிரை வண்டிக்காரன் தான் வந்துகொண்டிருந்தான். போர்ட்டருக்கு நேரமாகிவிட்டது. 'சாமி நீங்கள் குதிரை வண்டியில் போயிடுங்க; இல்லேன்னு, என்னை அனுப்பி வையுங்க. இரண்டுபேரைப் பார்த்தால்தான் என் வயிறு நடக்கும்" என்ருன்.

"இரப்பா போகலாம்" என்ருர் அந்தப் பெரிய மனிதர் "எசமான் எங்கே போகணும். காருமாதிரி நம்ம குதிரை போகுமுங்க, அஞ்சு நிமிசத்திலே கொண்டுபோய்ச்சேர்க்கிறேங்க, ஏறுங்க" என்ருன், குதிரை வண்டிக்காரன். பிறகு சம்மதித்தவர்போல "இந்தச் சாமான்களை எல்லாம், வண்டியில் எடுத்து வை;" என்ருர் அந்தப் பெரிய மனிதர். குதிரை வண்டிக்காரனும் கூலி கிடைத்தது என்ற சந்தோஷத்திலே படுக்கை பெட்டி இவைகளை எடுத்து வண்டியில் வைத்தான். "ஒரு சிறு பெட்டி மட்டும் நான் எடுத்துவரேன்" என்று பக்கத்தில் வைத்துக் கொண்டு, போர்ட்டர் கையிலே எட்டணு கொடுக்க, அவனும் முக மலர்ந்து, ஒரு கும்பிடு போட்டு விட்டு ஓடினன்.

அந்தப் பெட்டி ஒன்றை மட்டும் பக்கத்தில் வைத்துக்கொண்டு குதிரை வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டார். குதிரை வண்டிக்காரனுக்குச் சந்தேகம் வந்தது. அந்தப் பெட்டியில் எக்கச்சக்கமாக நோட்டுகள் இருக்குமோ என்று நினைத்தான். எப்படியிருந்தால் நமக்கென்னவென்று எண்ணியபடி அவரைப் பார்த்தான். அந்த மனிதரை எங்கோ பார்த்தது போலவும் இருந்தது. அந்த மனிதரும் இந்த வண்டிக்காரனை எங்கோ பார்த்ததுபோல் உள்ளதே! பல வருடங்களுக்கு முன் பார்த்த நினைவாக உள்ளதே என்று அவ்வரும் குழப்பத்தோடு இவனை உற்றுப் பார்த்தார். "இந்தாப்பா, உன்னை எங்கோ பல வருடங்களுக்கு முன் பார்த்ததுபோல் இருக்கே! நீ யார், எந்த ஊர்" என்ருர். இதைக்கேட்ட அவன், "ஆமாங்க உங்களையும் எங்கோ பார்த்தாப்போல இருக்கு" என்ருன். "ஆம்ப்பா, உன் பெயர் குமரன் தானே," என்ருர், அந்தப் பெரிய மனிதர். "ஆமாங்க" என்ருன் இவன். ஆச்சரியத்தோடு, "என்னப்பா என்னைத் தெரியவில்லையா சவுக்கியமா குமரா" என்ருர்.

அப்பொழுதுதான் குமரனுக்கு பழங்கால சம்பவங்கள் நினைவுக்கு வந்தன. இருபது வருடங்களுக்கு முன்னலே நடந்த சம்பவங்கள் ஒன்றன் பின் ஒன்ருக வரத்தொடங்கின—வெள்ளையனே வெளியேறு, இந்தியர்களைப் புறக்கணக்காதே, முதலாளிகளுக்கு உரிமை வழங்கி, வர்த்தகர்களுக்கு வாழ்வளித்து, சுரண்டிச்செல்லும் உன்னை நாங்கள் எதிர்க்கிறோம். மனிதனைச் சுதந்திரமாக வாழவிடு. எந்தத் தொழிலுக்கும் தடை செய்யாதே, எங்க

ளுக்குச் சுதந்திரம் கொடு. நீ ஓடு உனதுநாட்டிற்கு என்று போராடிய போது, எங்கும் 144 தடை விதிக்கப்பட்டதும், தந்திக்கம்பிகளை அறுத்ததும், தண்டவாளங்களைப் பெயர்க்க முயன்றதும் இப்படியாக காங்கிரசின் குழுவினரால் தீர்மானிக்கப்பட்டு செய்த காரியமெல்லாம் அவனுக்கு நினைவுக்கு வந்தன. அவன் இதை நினைவிலிருத்திக்கொண்டுஇருக்கையில்...

"என்னப்பா குமரா யோசிக்கிருய்?"

மீண்டுமொருமுறை அவரைப் பார்த்துவிட்டு "ஒன்றுமில்லேங்க, பழைய நினைவுகள்..."

"குமரா, உப்புச் சத்தியாகிரகத்தின்போது நடந்த போராட்டத்தில் கலந்துகொண்டு சிறைசென்றுயே! உனக்கேண்டா கொழுப்பு என்று நான் சொன்னேனே! அது நினைவிருக்கா? ஆகஸ்டு போராட்டத்திலே அடி உதைபட்டு, மண்டை உடைந்து இரத்தம் சொட்ட, சொரணையற்றுக் கிடந்தாயே! அது நினைவிருக்கா? கதர்த்துணிகளைத் தெருவிலே விற்றுக்கொண்டுவரும்போது நானும் எனது நண்பரும் உன்னிடம் வலிய வம்புக்கிழுத்துக் கலாட்டா செய்தோமே! குமரா! எவ்வளவு முட்டாள்தனம் பார்த்தாயா. அன்று காங்கிரசின் மகிமை கொஞ்சம்கூடத் தெரியாமல், உங்களிடம் தவருகநடந்துகொண்டோம் குமரா." என்று அங்கலாய்த்தார்.

"எல்லாம் மறந்துபோகுங்களா. போராடினேம், உதைபட்டோம், சிறைப்பட்டோம், கல்லுடைத்தோம், இரத்தம் சிந்தினேம்! ஆனல்..."

"ஆம் குமரா! காந்தி இல்லே. வழிகாட்டிய அந்த உத்தமர் இல்லே. அவர் இருந்தால் உன்போன்ற உத்தமனைக்கண்டு சந்தோஷப்படுவார்."

"சந்தோஷப்படமாட்டார். சஞ்சலப்படுவார்."

"ஆம் குமரா, பஞ்சம் அதிகரித்துப் போயிட்டுது. அதுவும் பல கட்சிகள் தோன்றித் திட்டு திட்டின்னு திட்டுது. அவர் இருந்தாலும் இந்தத் திட்டுகள் கேட்டு கண்ணீர் வடிப்பார்."

"இல்லேங்க காங்கிரஸ் கட்சியின் நிலைகண்டே கண்ணீர் வடிப்பார். அதன் அநியாயத்தைக்கண்டே கண்ணீர் வடிப்பார் அதிகாரவெறியைக் கண்டு கண்ணீர் வடிப்பார். சனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைத்து, அகிம்சா எனும் சொல்லை அதன் மேல் பரப்பி, அதிகார வெறியால் கல்லறை கட்டிப், பசப்பு என்னும் பளிங்குக் கல்லை மூடிபோட்டு, பாரதமாதாவுக்கு ஜே! வந்தேமாதரம்! மகாத்மாவுக்கு ஜே! என்னும் சொற்களை அதன்மேல் பொறித்து... உள்ளத்திலே ஊழலும் உதட்டிலே பசப்பு மொழியும் கொண்டு, போலிக் கதரால் ஆராதனை செய்யும் இந்த இழிநிலைக்கண்டே கண்ணீர் வடிப்பார்."

"என்ன குமரா பேசுகிருய்."

"ஆட்டம் கொடுத்த காங்கிரஸ் கோட்டையைத் துளைக்கும் பெருச்சாளிக் கூட்டங்களைப் பார்க்காமல் அவர் இறந்ததே மேல் என்று கூறுகிறேன்."

"அப்படியானல், நீ...... இப்போது..."

"நாடகத்துக்கு வேடம் போடுவதுபோலக் காரியத்துக்குக் கதரணியும் இந்தக் காங்கிரசுக் கூட்டத்தில் நான் இல்லே."

"காங்கிரசுக்கட்சியில் இல்லேயா!"

"இல்லே ஐயா இல்லே. உன்போன்ருர் உள் நுழைந்ததும் என்போன்ருர்க்கு என்ன வேலே? அன்று வெள்ளேயன் பின் நின்றீர், கொள்ளே கொள்ளேயாக இலாப மடித்தீர். அவனுக்குச் சலாம்வைத்தீர், செல்வாக்கு அடைந்தீர். நாங்கள், ஊழலே எடுத்துச் சொன்னேம், உரிமைக்காகப் போராடினேம், எதிர்த்தோம். துயருற்ரேம், துன்பம் அடைந்தோம். தொல்லேகளுக்கு ஆளானேம், நன்மையின்றி நலிவுற்று நடுவீதியிலே நின்ரேம். எங்கள் உள்ளத்திலே இன உணர்ச்சியிருந்தது, நேர்மையிருந்தது, தன்மானமிருந்தது, தயங்காது போராடினேம், தாக்கப்பட்டோம், ஆனல் உங்களிடத்திலே அது இன்றும் அன்றும் இல்லே. இன உணர்ச்சியை விலேகூறினீர்! தன்மானத்தைத் தவிடுபொடியாக்கினீர்! வஞ்சகத்திற்கு வால் பிடித்தீர்! ஆணவத்திற்கு தலே வணங்கி ஆதரவு தந்தீர்! அதனல் நலிவோ துயரோ உங்களே அணுகவில்லே!"

"குமரா! பழைய கதைகளேப் புரட்டாதே. அன்று அறியாத்தனத்தால் செய்தோம்."

"இன்று மட்டும் என்ன? உங்கள் கட்சியிலேஉள்ளவர்களில் நேர்மையானவர் யார்? விரல் விடுங்கள். எம். எல். ஏ.க்கள், நேர்மையான ஓட்டுவாங்கி வந்தவர் எத்தனே பேர்? உழைப்பவன், என்ற நம்பிக்கையோடு மக்கள் அனுப்பி வைத்தவர் எத்தனேபேர்? எல்லாம் பணமூட்டை, பட்டினி கிடப்பவனேக் கண்டு பரிகசிப்பவனும், பலரைக் கெடுத்துச் சிலரை வதைத்து, செல்வாக்குப் பெற்றவனும், காங்கிரசின் முன்னுள் தலேவர் யார் என்றுகூட அறியாதவன், கதரைத் தொட்டறியாதவன், கள்ளுக்கடை நடத்தியவன், இவர்கள்தானே தவிர, உண்மையாகப் பாடுபடுபவன் யார்? உண்மையாக உழைத்தவனுக்கு ஒரு பதவியுண்டா?

"குமரா நீ ஆத்திரத்தில் பேசுகிருய்."

"ஆத்திரம் வராமல் என்ன செய்யும்? இலஞ்சம் ஒழிக ஒழிகவெனப் பாட்டுப் பாடினுர்கள். இப்பொழுது இலஞ்சமே வாழ்க. வாழ்க என அதைக் கடைப்பிடிக்கிருர்கள். எந்த மதுவை ஒழிக்கவேண்டுமென்று கூறினுர்களோ, அதையே கொண்டு வருகிருேமென்று கூறி ஓட்டு வாங்குகிருர்கள் (புதுவையில்).

"குமரா மற்றக்கட்சிகளின் பிரச்சாரத்தைக் கேட்டு நீ கெட்டுப் போயிட்டே"

"நான் கெட்டுப் போகவில்லே, கெட்டவன் கண்களுக்கு, எல்லோருமே கெட்டவனுகத்தோன்றுமாம். நான் உண்மையாக நேர்மையோடுதான் இருக்கிறேன்"

நீ காங்கிரசில் பாடுபட்டவனுச்சே! உனக்கு நிலம் ஐந்து ஏக்கர் வழங்கவில்லேயா?

"எனக்கா? நிலமா?" காகம் பழத்தையும் உண்கிறது மாமிசத்தேத்யும் உண்கிறது, என் நாற்றமெடுத்த பூச்சி புழுக்களேயும், மோசமான அசூசையையும்கூட உண்கிறது, பறவையினம்தான் என்று அதற்கும் இந்த ஆகாரம் போட்டால் உண்ணுமா. பழவகைகள்தானே உண்ணும். அதுபோல ஊழல்களேயே செய்து நாற்றமெடுத்த குட்டையில் ஊறிப் பழக்கமானவர்கள் நீங்கள். அதனல் இதுஉங்களுக்குச் சர்வசாதாரணம் முன்பு வெளியிலிருந்து செய்து

வந்தீர்கள். இப்பொழுது உளவே புகுந்து செய்கிறீர்கள். முன்பு மக்களுக்குத் தெரியும், இப்பொழுது ஊழலை மறைக்க காங்கிரசெனும் பெயரால் கதரெனும் போர்வையால், மறைத்துக்கொண்டிருப்பதால் மக்களுக்குத் தெரியவில்லை.''

''குமரா உன் பேச்சைக்கேட்டு எல்லாம் புரிந்துகொண்டேன். நெடுநாளாகக் காங்கிரசில் இல்லைப் போல் இருக்கு''

''எப்படிங்க இருக்கமுடியும்?''

''அப்போ நீ கழகத்திலே சேர்ந்துட்டியா''

''ஏனுங்க உங்களுக்கு பயமா இருக்கா. அப்படி நான் கழகமா இருந்தாலும் உங்களைப்போல எங்க இடத்திலே அதிகார வெறியில்லை, உணர்ச்சியுண்டு, அதோடு கட்டுப்பாடும் உண்டு''

''அப்போ நீ.........?''

''ஆமாங்க உணர்ச்சியும் மானமும் உள்ளது அதுதானே''

''அடபாவி. ஏண்டா இப்படியாயிட்டே! நீ நம்ம ஆளுண்ணு பார்த்தால்!''

உங்களுக்கு உணர்ச்சியும், மானமும் இருந்தால்! உங்க ஆளுதானுங்க. அதுதான் உங்க இடத்திலே மருந்துக்குக்கூட இல்லைங்களே.''

''குமரா, நீ எங்களை, முன்போலவே நினைக்கிருய்!''

இல்லை, இப்பொழுது உங்கள் நெஞ்சில் நேர்மை இருக்கிறதா? நெஞ்சைத்தொட்டுப் பதில் கூறுங்கள். தில்லுமுல்லு நடக்காத தேர்தல் களம் ஏதாவது உண்டா? வசை பாடாத நாளுண்டா. வால் பிடிக்காத நேரமுண்டா? கூறுங்கள். கொல்லைப்புறமாக உள் நுழைந்து பதவி கிடைத்தால் போதுமென்று பல்லைக் காட்டிக்கொண்டு இருக்கிறீர்களே தவிர, நேர்மையுண்டா! உணர்ச்சியுண்டா? தன்மானமுண்டா? இன எழுச்சியுண்டா? மொழிப்பற்றுண்டா. என்னைப் போல—இதோ ரோடிலே ரிக்ஷா இழுப்பவனைப்போல, அதோ பிளாட்பாரத்திலே குடியிருக்கானே! கொட்டும் மழையிலே, சட்டிபானை மறைவிலே குழந்தைகளையீன்று குடும்பம் நடத்தும் அவர்கள் எல்லாம் இந்நாட்டு மன்னர்கள். எங்கள் நாட்டிலும் நாற்பதுகோடி மன்னர்கள் இருக்கிருர்கள் என்று பார்தட்டிப் பேசும உங்கள் பட்டியலிலே இவனும் சேர்ந்தவன்தானே!

இவர்களைப்பற்றி நினைப்பதுண்டா? இரக்கமுண்டா? ஓட்டுப் பெட்டி நிறையவேண்டிய சமயத்திலே, 'நீங்களெல்லாம் மன்னர்களல்லவா' என்று அந்த நாதியற்றவனைப் பார்த்துப் புகழ்வது! பதவி நிலைத்தபிறகு, பல பஸ்கள் வாங்கவேண்டும்; எந்தப்பக்கம் ஓட்டுவிடலாம், என்ற நினைவே தவிர, மக்களுக்கு உழைக்கவேண்டும் என்ற எண்ணம் யாருக்கு?

''குமரா நீ மிகவும் வறுமையிலே வாடுகிருய் போலிருக்கே!''

''என்னைப்பற்றிக் கவலையில்லை. நான் ஒண்டிக்கட்டை, என் குதிரைக்குப் புல்லும், எனக்கு ஒரு ரூபாயும் கிடைத்தால் போதும். சென்னையிலே சுற்றிப்பாருங்கள், சுவரின் ஓரத்திலே, அடுப்புக் கல்லே தலையணை, அடுப்புச் சாம்பலே பஞ்சுமெத்தை. சட்டிபானைகளின் முடைநாற்றத்திற்குக்கொஞ்சம் மறைவாக, கிழிந்த கந்தல் துணி இவர்களுக்கு மேல்மூடி. இப்படி வாழும் குடும்பமெல்லாம் செழிப்புற்று இருக்கிறதா? வறுமையில்லையா!''

''இதையெல்லாம் தீர்க்கமுடியுமா. கொஞ்சம் கொஞ்சமாகத் தானே கவனிக்கமுடியும்.''

''எதைக்கவனித்தீர்கள்? நேருவோ, வெளிநாட்டு மந்திரிகளோ, சென்னைக்கு, நாங்கள் குடியிருக்கும் அந்த வழியாக வருவதாக இருந்தால் மூட்டை முடிச்சுகளோடு எங்காவது ஓடவேண்டும். இதைத்தானே நீங்கள் கவனித்தீர்கள். நாங்கள் இந்தத் தமிழ் மண்ணிலே பிறந்து தமிழ்நாட்டிற்கு வரும் தலைவர்களைப் பார்க்கக்கூட உரிமையில்லையா! இதுதான் சுயராச்சியமா? சுதந்திரநாடா? குடிஅரசா? ஜனநாயகமா? சமதர்மமா?'' என்றதும் அவன் கண்களில் நீர் துளித்தன.

''குமரா கழகப் பத்திரிகைகள் படித்துப் படித்து உன் உள்ளத்திலே விஷம்போல் ஏறியிருக்கு''

''இல்லை விழிகள் திறந்திருக்கு. நீங்களும் ஒரு மாதம் விடாது கழக ஏடுகளைப் படித்துப் பாருங்கள், உணர்ச்சியுண்டாகும். மனிதனுகி விடுவீர்கள். தமிழன் என்ற எழுச்சி பெற்று அந்நியனுக்கு வால் பிடிக்கும் அடிமைப்புத்தி இருக்கவே இருக்காது!''

''ஏது, என்னையும் கழகத்தில் சேர்த்துவிடுவாய் போல்இருக்கே''

''நான் உங்களைச் சேரும்படி கூறவில்லை. காங்கிரசு கலைந்தபின்னுலே நாங்கள் வேண்டாமென்ருலும் நீங்களே வந்து ஒட்டிக்கொள்ள மாட்டீர்களா......'' பேசிக்கொண்டே போவதற்குள்குறிப்பிட்டஓட்டலைக் குதிரைவண்டியும்போய் அடைந்துவிட்டது. இவர்கள் உரையாடலுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

''குமரா சாமான்களை எல்லாம் எடுத்துக் கீழேவை'' என்று கூறிவிட்டு இரண்டு அடி எடுத்து வைத்து நகர்ந்தார். சாமான்களை கிழிறக்கிய குமரன் கைதவறி, அவர் பாதுகாத்துவந்தாரே அந்தப் பெட்டியை கீழேபோட்டான். அது இவ்வளவு பாரமாக இருக்கும் என்று எண்ணாது கவனக் குறைவாக இறக்கியதால் கீழே விழுந்தது. பெட்டி திறந்து அதில் உள்ள கண்ணாடிப் புட்டிகள் சிதறியோடின. பலர் சூழவே போலீசும் இருவர் வந்தனர்.

''என்னப்பா இந்தவேலை'' என்ருர் அந்தப் போலிக் காந்திசிடர்.

''யாருக்கு இந்தவேலை''

''அந்தப் புட்டிகளை வண்டியில் வைத்திருந்து என் சாமான்கள் எல்லாம் நாறும்படி செய்துவிட்டாயே'' என்ருர் மீண்டும். இந்த வார்த்தைகளைக் கேட்ட குமரனுக்குத் தலையில் இடிவிழுந்தாற்போல இருந்தது.

'ஐயா அவர்களே. வெள்ளையன் காலத்திலே நடித்தவேடம் இன்னும் கலையவில்லையா? இந்த நடிப்புக்கு இந்தப் புனிதமான கதருடை தானு கிடைத்தது''

இந்த வார்த்தைகளைக் கேட்டு ஓட்டலில் இருந்து ஒருவர் வந்தார். அவரைக் கண்டதும், போலீசார் சலாம் வைத்தார். ''இந்தப் பயலைக் கொண்டு போங்கள் சிறைக்கு என்ருர்'' குமரனைப் பார்த்து அந்தப் பெரிய மனிதர்.

குதிரை வண்டிக் குமரனு கம்பி அறைக்குள் சென்ருன். சிறைக் கம்பிகளிலே தலையை மோதிக் கொண்டான். கண்ணீரும் இரத்தமும் கம்பிகளின் வழியே கலந்து ஓடின. குதிரையும் வண்டியை இழுத்துக்கொண்டு காவல் நிலையம் நோக்கி ஓடியது.

✽

பெற்றமனம்!

—மதி—

இளந்தமிழன்

மென்மையான அனிச்சம்பூ முகந்தவுடன், குழைந்துவிடும் என்பார்கள். அமுதாவை நன்கு தெரிந்தவர்கள்—அந்த அனிச்சம்பூவிற்கும் அமுதாவிற்கும் வேறுபாடே இல்லை என்றுதான் சொல்வார்கள்! அவ்வளவு மென்மையானவள் அமுதா!

அன்புத்தாய் கனகத்திற்கு அருமைமகள் அமுதா ஒரே பெண். அமுதாவின் உடல் மென்மையைப் போலவே உள்ளமும் மென்மையானது, என்பதைக் கனகவல்லி அம்மாள் நன்றாக அறிந்திருந்தாள்! எந்தக் காரணத்தை முன்னிட்டும், தன்னுடைய எழில் மகளைத் திட்டியதே கிடையாது அவள்! கனகத்திற்கு இருந்த கவலை எல்லாம் அமுதாவின் எதிர்காலத்தைப்பற்றியே— மாப்பிள்ளை கிடைக்க மாட்டான் என்றல்ல! போட்டி போட்டுக்கொண்டுவரும் ஆடவர்களில், எவர்கையில் அந்த மலரை ஒப்புவிப்பது என்பதே பெரும் பிரச்சினையாயிருந்தது கனகம்மாளுக்கு!

கனகம் நடத்திவந்த இட்லிக் கடைக்குக் காரணமாய் இருந்தவள் அமுதா! அமுதா இல்லையேல் கடை இல்லை! அந்தக் கடையில் பறந்து பறந்து வியாபாரம் செய்து கல்லாவை நிரப்புவாள் கனகம்!

தலை கலைந்துகிடக்க, ஆடைகள் வியர்வையில் நனைந்து உடலோடு ஒட்டி உறவாட, வெப்பத்தைக் குறைக்க அடிக்கடி நீர்க்குவளையில் கையை விட்டு எடுத்தபடி, அலட்சியமாகப்பார்க்கும் கனகம் எங்கே? —சிந்திய கண்ணீரும், சிவந்த கண்களுமாக இன்று தரையிலே புரண்டு அழும் கனகம் எங்கே? வேறுபாடு 'மலைக்கும்—மடுவுக்கு'மாக இருந்தது!

இப்படி ஒரு சம்பவம் நிகழும் என்று கனவில்கூட நினைத்திருக்க மாட்டாள் கனகம்! அவளுடைய அழகான கோட்டைகளை எல்லாம் தூள்தூளாக்கிவிட்டாள் அமுதா!

'தாய்' என்றிருந்தால் திட்டக் கூடாதா? அதற்குக் கோபித்துக் கொண்டு ஓடிவிடுவது யார் செய்யும் செயல்? கடை இருக்கிறதே என்ற பொறுப்பில்லாமல், நான்காம் வீட்டுக் கோமளத்துடன் அரட்டை அடித்துவிட்டு வந்தாளே—அதைக் கண்டித்தது குற்றமா? இத்தனைக்கும் — அறிவற்ற கழுதை — என்றுதானே திட்டினாள்? யாருக்காகக் காலமெலாம ஏற்பட்ட எதிர்ப்புகளையும் இடையூறுகளையும் சமாளித்துக்கொண்டு வாழ்க்கையை நடத்திவந்தாளோ, அவளே இன்று எதையும் யோசிக்காமல் போய்விட்டால்? என்ன சொல்லி அமைதி அடைய முடியும் அவள்? எங்கேயாவது ஓடிப் போய் உடலாற உழைத்து உண்டு கொண்டிருந்தாலும் பரவாயில்லையே—வேறு செயல்களிலே இறங்கிவிட்டால்? அவள் இறங்காவிட்டாலும் சமூகம் சும்மாவிடாதே! அப்படியானால் அவள் அழிவதுதான் முடிவா? 'கனகம்மாளின் மகள் கற்பிழந்தாள்' என்ற பழி ஏற்படலாமா?

கணவன் இறந்தபோது கனகம் பூத்துக் குலுங்கும் புது மலராக இருந்தாள். அன்றுமட்டும் அவள் தலையை அசைத்திருந்தால், இன்று எந்தச் சீமானின் வீட்டிலாவது, சொகுசுச் செல்வமாக இருந்துகொண்டிருக்க முடியுமே! யாருக்காக அந்த வாழ்வைவெறுத்தாள்? இந்த முடிவைக் கேட்பதற்காகவா?

அமுதா வீட்டைவிட்டுச்சென்று ஐந்து நாட்கள் ஆகியிருந்தன. கனகம்மாள் உண்ணவில்லை--உறக்கம் அண்டவில்லை—படுக்கை முள்ளாகக் குத்தியது. உடலில் இருக்கும் நீரெல்லாம் கண்களின் வழியே கண்ணீராகச் சுரந்தது. பக்கத்து வீட்டு முத்தம்மாள் இல்லாதிருந்தால் கனகம் தற்கொலை கூடச் செய்துகொண்டிருப்பாள். அவள்தான் வற்புறுத்தி வேளைக்குச் சோறு கொணவந்து கொடுத்துக் கொண்டிருந்தாள்.

•

அழுது அழுது இரவெல்லாம் கழித்த கனகத்திற்கு விடியற்காலை கண்ணை இழுத்துக்கொண்டு சென்றது. அபபடியே தூங்கிவிட்டாள்! காலை மணி பத்து இருக்கும். கதவைத் திறந்துகொண்டு ஓடிவந்தாள் முத்தம்மாள்.

“அக்கா... அக்கா கேட்டாயா செய்தியை?” என்று பரபரப்போடு கூறிக்கொண்டே கனகத்தை எழுப்பினாள்.

கனகம் வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தாள். “என்ன—என்ன?” என்றாள் ஆவலோடு!

“இளம் பெண் கூறிய சோகக் கதை” என்று தலைப்பிட்ட செய்தியை நாளிதழிலிருந்து படித்தாள் முத்தம்மாள்.

கனகத்திற்கு மூச்சே நின்றுவிடும்போல் இருந்தது. 'இப்போது எங்கிருக்கிறாளாம்' என்றாள் ஆவலோடு.

[illegible] போலீசார் பிடித்துவைத்திருக்கிறார்கள்'' என்றாள் முத்தம்மாள் [illegible]

[illegible] — போய் சேலைகட்டிக் [illegible] வா — பன்னிரண்டு [illegible] யைப் பிடித்தால் [illegible]. சென்றுவிட [illegible] ஆவேசமாகக் [illegible]

[illegible] ரயிலேறிச் [illegible] சேர்ந்த கனகத் [illegible]? எப்படிப் [illegible] புரியவில்லை. [illegible] மனறக் கட்டி [illegible] போலீசில் இருக் [illegible] நினைவுக்குக் [illegible]!

[illegible] அழைத்துக் [illegible] மாக நடந்தாள். மாலை [illegible] இருக்கும். 'எங்கேபோகி [illegible] யோசிக்காமல் [illegible] கொண்டிருந்த கனகம்மாள் [illegible] வந்ததும் திடுக்கிட்டுப் [illegible] 'எங்கே வந்திருக்கிறோம் [illegible]? எந்தப் போலீசுக்கு [illegible] போவது? யாராவது வழி [illegible] போலீசுக்காரர்களைக் கேட்க [illegible]'' என்று கனகம்மாளின் மனம் நிலையின்றித் தவித்தது!

அவள் கண்களில் நீர் திரையிட்டது. "இவ்வளவு இன்னல்களும் [illegible] என்னால்தானே? எப்படி ஒழுக்கமாக இருந்தவள் — இப்படிக் கெட்டு விட்டாள் — எல்லாம் என்னால் தானே?'' என்று தன்னையே நொந்துகொண்டாள். விம்மலும் கண்ணீரும் அதிகரித்தது. [illegible] ஒளியில் மக்கள் கும்பல் கும்பலாகப் போய்க்கொண்டும் வந்துகொண்டும் இருந்தனர். முத்தம்மாள் கனகத்திற்கு ஆறுதல் சொல்லிக்கொண்டே இருந்தாள்!

திடீரென்று கனகத்திற்கு எங்கிருந்து அவ்வளவு பெரிய தெம்பு வந்ததோ? 'ஓ'வென்று அலறிக்கொண்டு வேகமாக ஓடினாள். வெட்கம் காற்றிலே பறந்தது. பெண்மை கடல் நீரில் கரைந்துகொண்டிருந்தது. வேறு வழியின்றி முத்தம்மாளும் ஓட ஆரம்பித்தாள்!

அருமையான பால் மணலில் கால்களை ஆழப் பதித்து அன்ன நடை நடந்து கொண்டிருந்த அமுதா, தன்னை யாரோ பின்னாலிருந்து இழுக்கவே சட்டென்று திரும்பினாள். ஒரே ஒரு வினாடி தான் இருக்கும் — "பளார்...பளார்... பளார்'' என்று மாறி மாறி அவள் கன்னங்களில் அறைகள் விழுந்தன. சுற்றிலும் போய்க் கொண்டிருந்தவர்கள் கும்பலாகக் கூடி விட்டார்கள். ஒருவன் கனகத்தின் கையைப் பிடித்துக் கொண்டான்.

ஆவேசம் மிளிர, "குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்பே, ஒரு முழக்கயிறு அகப்படவில்லை உனக்கு?'' என்று கத்தினாள் கனகம்.

"அம்மா...'' என்று கதறிக் கொண்டே, மண்மகளின் மடிமேல் விழுந்தாள் அமுதா!

•

ஒரு வாரத்தில் என்னென்னவோ நடந்து, கனகத்தைத் திணற அடித்துவிட்டது! துன்பமும் இன்பமும் கைகோத்துக் கொண்டு கனகத்தைச் சுற்றிக் கூத்தாடிற்று! பத்திரிகைச் செய்தியைச் சரியாகப் படிக்காத முத்தம்மாளின் பேச்சைக் கேட்டு இரயிலேறி ஓடியதை நினைக்கச் சிரிப்பாக வந்தது கனகத்திற்கு!

"ஒரு சொல் கேட்டதற்குத் தாளாமல் வீட்டைவிட்டு ஓடியவள், கடற்கரையில் பலபேர் முன்னிலையில், அடித்துத் திட்டிய போதிலும் அமைதியாக இருந்தாளே'' என்று ஆச்சரியப்பட்டாள் கனகம்.

இரயிலில் வந்த அலுப்புத் தீரச் சீக்கிரமாகவே படுத்துக்கொண்டாள் கனகம். பொழுது விடிந்தது. தன்னுடைய மகளைப் பார்ப்பதற்குக் கண் கூசியது கனகத்திற்கு!

அமுதாவிற்கு இந்த இட்டலித் தொழில் பிடிக்கவில்லை. வேறு ஏதாவது தொழில்செய்து பிழைக்கவேண்டும் என்பது அவள் எண்ணம். அன்று அவள் தாய் திட்டிவிடவே மனம் நெகிழ்ந்து ஏதோ ஓடிவிட்டாள்.

கனகத்தின் அன்புப் பிடியில் அகப்பட்டுத் தவித்தாள் அமுதா! "எனக்குக்கூடப் பயமாகத்தான் இருந்தது அம்மா ... மறுபடியும் இரயிலேறி வந்துவிடலாம் என்று நினைத்துத் திரும்பிய நேரத்தில் தான், தற்செயலாக என் தோழியைப் பார்த்துவிட்டேன், அவள் விடாப்பிடியாக என்னை வீட்டிற்கு அழைத்துச் சென்றுவிட்டாள்... ஒருநாள் மாலை நாங்கள் எல்லோரும் கடற்கரைக்குச் சென்றிருந்தோம்... அப்போதுதான்...'' என்று முடிக்காமலே தலையைக் கவிழ்த்துக் கொண்டாள் அமுதா!

மகளின் கன்னத்தைத் தடவியபடி, "அமுதா கண்ணே — வலிக்கிறதா? என்று அன்பாகக் கேட்டாள் கனகு!

"போ, அம்மா...நீ அடித்தால் கூட நோகுமா?'' என்று கொஞ்சி விட்டு அம்மாவின் மடிமேல் தலையை வைத்துப் படுத்துக் கொண்டாள், அமுதா!

"இந்தக் குழந்தை 'பால் குடிக்குமா? சோறு சாப்பிடுமா?'' என்று கேட்டவாறே உள்ளே வந்தான், அமுதாவின் அன்பு அத்தான் செல்வம்.

"இரண்டும்...'' என்று கூறி விட்டுக் குறும்பாகச் சிரித்தாள் அமுதா.

"அமுதா, கெட்டிக்காரிதான்... போன இடத்தில் இருந்து ஒருத்தரைத் திருடிக்கொண்டு வந்துவிட்டாள்!'' என்று கூறிக் கொண்டே அங்கு வந்தாள் முத்தம்மாள்.

"இவர் அமுதாவின் தோழியினுடைய அண்ணனும் — முன்பே இவளுக்குத் தெரியுமாம்! நம்மிடம் கூறவே இல்லை. விடுமுறைக்கு வீட்டில் வந்திருந்தாராம். இவரை, அமுதா விரும்புகிறாள் என்று அமுதாவின் தோழி சொன்னாள். இவரும் அமுதாவை விரும்புவதாகத் தெரிகிறது. நீ என்ன சொல்கிறாய் முத்து?'' என்றாள் கனகம்!

"உனக்குச் சம்மதம்தானே?'' என்றாள் முத்தம்மாள்!

"எனக்கென்ன? அமுதா சொன்னால் சரி,'' என்றாள் கனகம்.

அமுதாவை ஓரக்கண்ணால் பார்த்தான் செல்வம்!

"சரி...அக்கா — அமுதா சென்னைக்குப்போய் விடுவாளே என்று வருத்தப்படாதே. நான் இருக்கிறேன் உனக்குத் துணை'' என்று கூறிவிட்டு அமுதாவைப் பார்த்து, "அமுதா, எங்களை எல்லாம் மறந்துவிடாதே. அடிக்கடி வந்து போ'' என்று கிண்டலாகக் கூறினாள் முத்தம்மாள்.

"போ...சித்தி'' என்று சிணுங்கிக்கொண்டே உள்ளே ஓடினாள் அமுதா! அவளைப் பின் தொடர்ந்தான் செல்வம்! மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தாள் கனகம்! அதையெல்லாம் பார்த்துப் பூரித்துப் போனாள் முத்தம்மாள்!

❀

பானைகளும் சிரிக்கின்றன !

—[மக்கள் செல்வன்]—

(சாலையில், "உணவுப்பொருள்களின் விலையைக் குறையுங்கள்" என மக்கள் குரல் எழுப்பிச் செல்கின்றனர். ஓர் வீட்டில் உள்ள அரிசிப்பானை, புளிப்பானை, மிளகாய்ப்பானை பேசுகின்றன.)

அரிசிப்பானை:- என்ன தம்பி! தெருப் பக்கம் சத்தம் கேட்கிறதே!

புளிப்பானை:- உங்களுக்குத் தெரியாதா அண்ணா! இன்று, விலைவாசிகளைக் குறைக்கச் சர்வகட்சி கூட்டம் நடத்தப்போகின்றார்கள். அதற்காகப் பொது மக்கள் கூட்டமாகச் செல்கின்றனர்.

மிளகாய்ப்பானை:- அவசியம் செய்ய வேண்டியதுதான். உணவுப் பொருள்களின் விலை நாளுக்கு நாள் ஏறிக்கொண்டே சென்றால் ஏழைமக்கள் என்னசெய்வார்கள்?

பு. பானை:- நீ சொல்வது உண்மைதான் தம்பி! உணவுப்பொருள்களின் விலைமட்டும் நாளுக்கு நாள் உயர்கிறது. ஆனால் ஏழை மக்களின் பொருளாதாரம் உயரவில்லை-தினக்கூலி உயரவில்லை-மாதச் சம்பளம் உயரவில்லை. இந்நிலையில் என்ன செய்யமுடியும்?

அ. பானை:- முன்பெல்லாம் அரிசி வாங்கிக்கொண்டு வந்து என்னிடத்தில்கொட்டிவைத்துத் தினம் தினம எடுத்துச் சமைப்பார்கள். இப்போது கடையில் வாங்கி வந்ததும் உலையில் கொட்டுகின்றார்கள்.

மி. பானை:- அண்ணா சொல்வது நூற்றுக்கு நூறு உண்மையே! என்னையும் அப்படித்தான் செய்கிறார்கள்.

பு. பானை:- உன்னை என்ன, நம் இனத்தவர்கள் எல்லோரையும் அப்படித்தான் செய்கிறார்கள். இரண்டு வருடங்களுக்கு முன்பெல்லாம் புளி வாங்கி என்னை நிரப்பிவைத்திருப்பார்கள். ஓராண்டு முடிந்தும்கூடப் பாதி நிரம்பி இருப்பேன். இப்போது ஆறுமாதகாலமாகவே காலியாக இருக்கின்றேன்.

அ. பானை:- பாவம்! அவர்கள் என்ன செய்வார்கள்? எனது பத்தாண்டுக்கால அனுபவத்தைச் சொல்கின்றேன். எனக்குத் தெரிந்து அரிசி படி 14 அணா (ப. படி) புளி வீசை 3/- ரூபாய் மிளகாய் வீசை 5/- விற்றது கிடையாது. இப்படி விற்றால் ஏழைமக்கள் எப்படி வாங்கி நம்மை நிரப்பிவைப்பார்கள்.

மி. பானை:- ஏன் அண்ணா! அரிசியைத்தான் மலையாளத்துக்கு அனுப்புவதால் விலை ஏறி விட்டது என்கிறார்கள். இந்தப் புளி, மிளகாய் விலை ஏன் இப்படி உயர்ந்துவிட்டது?

பு. பானை:- உனக்குத்தெரியாதா? இப்ப புளி மிளகாயையும் மலையாளம் போன்ற வெளி இடங்களுக்கு அனுப்பப்படுகிறதாம். அதனால்தான் இந்த விலை உயர்வு.

அ. பானை:- சென்ற கிழமை நமது உணவு அமைச்சர் பக்தவச்சலம், புளி மிளகாய் இவற்றை வெளி நாடுகளுக்கு அனுப்பக்கூடாது என்றார். அத்துடன் மத்திய அரசுக்கும் நிலமையைத் தெரியப்படுத்தப்போகின்றாராம்.

பு. பானை:- ஏன் முன்பு மூக்கு அறுபட்டதை அதற்குள்ளாகவா மறந்துவிட்டார்.

மி. பானை:- ஏன் அண்ணா இதை ஏன் மத்திய அரசுக்குத் தெரியப் படுத்தவேண்டும்? இவர்களா பார்த்து ஏற்றுமதி செய்வதற்கு தடைவிதிக்கக்கூடாதோ?

அ. பானை:- பெட்டி நம்முடையது தான், ஆனால் அதன் சாவி அவர்களிடமுள்ளது. அவர்கள் சம்மதமின்றி எந்தப் பொருள்களையும் ஏற்றுமதி செய்யவோ, இறக்குமதி செய்யவோ உரிமை நம் அரசுக்குக் கிடையாது. இவர்கள் பெயரளவில்தான் மந்திரிகள்.

மி. பானை:- அப்படி என்றால் பெரிய பண்ணைகளில் உள்ள ஏஜெண்டு களைப்போல!

பு. பானை:- ஆம். இதற்கெல்லாம் மக்கள்தான் ஓர் முடிவு [illegible] வேண்டும்.

மி. பானை:- அதற்குத்தான் [illegible] போடப்போகின்றார்கள் [illegible]

அ. பானை:- கூட்டம் மட்டும் [illegible] டால் போதுமா? [illegible] நன்மைபய்க்காத [illegible] களை மீண்டும் [illegible] கூடாது.

மி. பானை:- அப்படி [illegible] போடக்கூடா[illegible], அப்படித்தானே!

அ. பானை:- ஆமாம்.

பு. பானை:- அதற்குத் [illegible] வழியைக் கையாளுகின்றார்களே! புரிந்த பணத்தைக்கொடுத்து விட்டுப் புரியாத ஓட்டை வாங்கிக் கொள்கின்றார்களே!

மி. பானை:- பாவம்! அவர்கள் என்ன செய்வார்கள்? அறியாமையும் ஏழ்மையும் இந்த நாட்டில் இருக்கும்வரை அவர்களைச் சொல்லி என்ன பலன்.

பு. பானை:- ஊம்! ஒரு நாள் வாழ்விற்காக ஐந்தாண்டு வாழ்வை இழந்து விடுகின்றார்கள்.

அ. பானை:- யாரது! சீனிடப்பியா? வா தம்பி எங்க போயிருந்தே?

சீனி டப்பி:- உங்களுக்கெல்லாம் ஓர் சமாச்சாரம் தெரியாதோ?

புளி, மிளகாய்ப்பானை:- (பதட்டத்துடன்) என்னது!

சீனிடப்பி:- அருப்புக்கோட்டை உப தேர்தலில் காங்கிரஸ் தோற்று விட்டது!

அ. பானை:- (ஆச்சரியத்துடன்) அப்படியா? மக்கள் இப்பொழுது தான் விழிப்புணர்ச்சி பெற்று வருகின்றனர். இனி அவர்களை யாரும் ஏமாற்றமுடியாது.

பு. பானை:- ஏன் தம்பி! இப்படிக் கருத்திருக்கின்றாய்?

பதிவு எண்: எம். 4642

தொலைபேசி எண்.... அலுவலகம் 15 இல்லம் ...118

சீனிடப்பி:- அதை ஏன் கேட்கின்றீர்கள். கடந்து மூன்றுமாதகாலமாக என்னை யார் தொட்டுப் பார்க்கிறார்கள். முன்பெல்லாம் இந்த வீட்டில் உள்ள குழந்தைகள் பள்ளிக்கூடம் போய் வந்த உடன் என்னைத் திறந்து ஓர் பிடி சீனியை அள்ளிக்கொண்டு போவார்கள். அவர்களை எல்லாம் பார்த்தே நீண்ட நாட்கள் ஆகின்றன. முன்பெல்லாம் தாராளமாகப் புழங்கிக்கொண்டிருந்த சீனிக்கு ஓர் கட்டுப்பாட்டை உண்டாக்கிவிட்டார்கள். அதன் காரணமாக நாட்டில் சீனியைப் பார்க்கமுடியவில்லை.

ஙி. பானை:- ஏன் கட்டுப்பாடுவந்தது? சீனி உற்பத்தி நாட்டில் குறைவா?

சீனிடிப்பி:- இல்லையே! சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு உற்பத்தி அதிகம் என்று பண்டிதரே கூறியிருக்கின்றார்.

அ. பானை:- அப்படி என்றால், பெரிய வியாபாரிகள் பதுக்கி வைத்திருப்பார்கள்.

பு. பானை:- பதுக்கிவைத்திருப்பவர்களை ஏன் கண்டுபிடித்துத் தண்டிக்கக் கூடாது?

சீனிடப்பி:- அது எப்படி முடியும்? பதுக்கிவைத்திருப்பவர்கள் எல்லாம் மந்திரிக்கு தெரிந்தவர்களாகவும், சொந்தக்காரர்களாகவும் தானே இருப்பார்கள்!

பு. பானை:- பதுக்கல்காரர்களையும் கொள்ளை இலாபம் அடிப்பவர்களையும் பிடித்துக் கடுமையாகத் தண்டித்தால், இந்தப் பதுக்கல் முறையும் கொள்ளை இலாபமும் இருந்தஇடம் தெரியாமல் போய் விடும். இல்லையா?

அ. பானை:- உண்மைதான். ஆனால் அந்தத் துணிவு நம் ஆளவந்தார்களுக்கு என்று வருமோ!

(எல்லாப் பானைகளும் சிரித்தல்.)

❋

"திராவிட நாடு"

பொங்கல் மலர்

சி. என். அ. தரும்

கருத்துப் படையல்கள், கட்டுரைகள், கதைகள்

ஆகியவற்றுடன்

வண்ண முகப்பும், எண்ணத் தொகுப்பும்

கொண்டதாக

ஜனவரி 14-ந் தேதி எங்கும் கிடைக்கும். விலை ரூ. 1--00

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில் ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.